பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 ஐப்பசி 14 ஜுல்-கஜ் 20 இதழ் 261

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 30-10-80

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS RECEIVED 19..-10-30 PERIODICALS DIVISION

## 69கோடி 80லட்சம் செலவில் காங்கேசனில் புதியசூளை!

### துறைமுகமும் அபிவிருத்தி, அமைச்சரவை அங்கீகாரம்!

(கொழும்பு)

69 கோடி 80 லட்சம் ரூபா செலவில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் மேலும் ஒரு சூளை நிர்மாணிக்கப்படவுள்ளது.

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. சிறில் மத்தியூ சமர்ப்பித்த இது குறித்த தீர்மானம் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உற்பத்தியைப் பெருக்கும் விதத்தில் அமைக்கப்படவுள்ள இப்புதிய சூளையின் மூலம் நாளொன்றுக்கு 1600 தொன் சிமெந்தை உற்பத்தி செய்யலாம்.

காங்கேசன்துறை துறைமுகத்தை 450 லட்சம் ரூபா செலவில் விஸ்தரிக்கவும் அமைச்சரவை அங்கீகாரமளித்தது. (ம-கு)

யாழ். மாவட்டத்தின் 1978 வரவு செலவுத்திட்ட விவகாரம்:

# 'யோகேஸி'ன்புள்ளிவிபரத்தை பிரதி அமைச்சர் ஏற்ருர்!

## நிதி ஒதுக்கீடு

(தெல்லிப்பழை)

பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியிலுள்ள உடுத்துறை மகாவித்தியாலயத்தில் சுமார் ஒருலட்சம்ரூபா செலவில்புதிய மாடிக்கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுகின்றது.

## "காணி அமைச்சர் காமினி மன்னிப்புகேட்கவேண்டும்"

### சபாநாயகரிடம் யாழ். எம். பி. கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக்கென 1978ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் முழுப்பகுதியும் செலவிடப்பட்டது என்று யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தெரிவித்த புள்ளிவிபரங்களை பிரதி திட்டஅமுலாக்கல் அமைச்சர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொண்டார்.

காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினிதிஸநாயக்கா யாழ்ப்பாணம் வந்திருந்த போது வீரசிங்கம்மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியபோது "1978 ம் ஆண்டில் யாழ். மாவட்டத்துக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 2 கோடி 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. இதில் 80 லட்சம் ரூபா மாத்திரமே செலவிடப்பட்டது" என்று பேசியது தொடர்பாக திரு. யோகேஸ்வரன் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணையின் போது பேசினர்.

திரு. யோகேஸ்வரன் 1978 ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மாநாடு கொழும்பில் திட்ட அமுலாக்கல் அமைச்சின் காரியதரிசியின் அலுவலகத்தில் 1979 ஜனவரி 15 முதல் 19 வரை நடைபெற்றபோது சமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையிலிருந்து செலவின புள்ளிவிபரங்களை வாசித்துக் காட்டினர்.

திரு. யோகேஸ்வரன் தனது பிரேரணையின்மீது பேசுகையில் கூறியதாவது;-

"காணி அமைச்சர் யாழ்ப்

8ம் பக்கம் பார்க்க)

## கொத்மலை அணையின் உயரம் குறைக்கப்படும்!

(கொழும்பு)

மகாவலித் திட்டத்தின்கீழ் கொத்மலையில் அமைக்கப்படும் அணைக்கட்டின் உயரத்தைக் குறைப்பதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

மகாவலித் திட்டத்தின் 5 திட்டங்களில் ஒன்றான ரத்தனிக்கலைத் திட்டத்தினையும் ஒருவருடத்திற்கு ஒத்திவைப்பதெனவும் அமைச்சரவை முடிவுசெய்துள்ளது. (ம-கு)

## யாழ். பல்கலைக்கழகத்திற்கு ரூ.1கோடி 65லட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக அபிவிருத்திக்கென புதிய வரவு செலவுத் திட்டத்தில் 1 கோடியே 65 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம், விஞ்ஞான பீடம், நூல்நிலையம், கணித-கம்யூட்டர் நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்கும் இராமநாதன் நுண்கலைக் கல்

(8-ம் பக்கம் பார்க்க)

## அபடானைவிட்டுமற்றுமொரு நகர்மீது ஈராக் தாக்குதல்!

### 300 ஈராக் வீரர்கள் பலி; ஈரான் படைகள் முன்னேற்றம்

லண்டன், அக். 29

ஈரான் ஈராக் போரில் ஈரானின் அபடான் எண்ணை நகரைக் கைப்பற்றுவதற்கு இதுவரை முயற்சி மேற்கொண்டுவந்த ஈராக் படைகள் இப்போதுஅபடானை கைவிட்டுவிட்டு மற்றுமொரு துறைமுகநகர் மீது தாக்குதல் நடத்திவருகிறது என்று பாக்தாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளையில் ஈரான் படைகள் பல இடங்களில் புதிதாக வெற்றிகள் பல பெற்று ஈராக் படைகளை துரத்தியடித்து வருகின்றன என்றுஈரான் தெரிவித்துள்ளது.

'குர்திஷ்' மாகாணத்தில் நேற்று நடைபெற்ற சமரில் 300 ஈராக் துருப்புக்களை ஈரானிய வீரர்கள் 300 ஈராக்கிய வீரர்களை படுகொலை செய்துள்ளனர் என்று ஈரான் அறிவித்துள்ளது.

## பணயக்கைதிகள் விவகாரம்

### இன்றும் முடிவில்லை

தெஹ்ரான், அக். 29

அமெரிக்க பணயக் கைதிகளை விடுதலை செல்வதற்கான நிபந்தனைகள் குறித்து இறுதி முடிவெடுக்கும் பொருட்டு இன்று மீண்டும் இரகசியமாகக் கூடிய ஈரான் பாராளுமன்றம் எதுவித தீர்மானமுமின்றி ஒத்திவைக்கப்பட்டது.

நாளை பாராளுமன்றம் பகிரங்கமாக பணயக் கைதிகள் விவகாரம்குறித்து இறுதி முடிவெடுக்கும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## "எமது நாட்டுக்கு பத்துலட்சம்வீடுகள்தேவை"

### பாராளுமன்றத்தில் பிரதமர்

(கொழும்பு)

"தனிவீட்டுச் சொந்தக்காரர் யாராவது, வாடகைக்குக் குடியிருப்பாளரிடமிருந்து வீட்டைத் திரும்பப் பெறவிரும்பினால், ஐந்துவருட வாடகைப் பணத்தை நஷ்டஈடாகக் குடியிருப்பாளருக்குக் கொடுத்தே குடியிருப்பாளரைவெளியேற்ற வேண்டும்".

இவ்வாறு பிரதமமந்திரிதிரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் வாடகை (திருத்த) சட்டமூலத்தின் 2-வது வாசிப்பின்மீது நடந்த விவாதத்தின் போது தெரிவித்தார்.

இத்திருத்த சட்டமூலம் பற்றி அவர் மேலும் பேசுகையில் 1'00ரூபாவுக்குக் குறைந்த வாடகைவீடுகளில் வசிக்கும் குடியிருப்பாளர்களின் நலன்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். மாநகரசபை சுகாதார விழாவிற்காக

BOND INSTITUTES

வழங்கும் கலை நிகழ்ச்சிகள்

பிரதம அதிதி:

திரு. சு. வித்தியானந்தன்

(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

இன்னிசை

திரு. கதிர் சுந்தரலிங்கம் குழுவினர்

வயலின் சோலா

R. ராதாகிருஷ்ணன் குழுவினர்

பரதநாட்டியம்

திருமதி ஞானமணி செல்லையா அவர்களின் பாரதி

கலாமன்ற மாணவிகள்

மெல்லிசை

சுண்டுக்குளி ராஜன் குழுவினர்

யாழ். திறந்தவெளி அரங்கில்

30-10-1980 வியாழக்கிழமை மாலை 6-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

7215

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

காரியாலயப் பணியாளர் தேவை. தராதரம் குறைந்தது எட்டாம் வகுப்புச் சித்தியெய்தியவராயும், 20 வயதிற்கு மேற்பட்டவராயும், நற்குண முடையவராயுமிருத்தல்வேண்டும். அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 10-11-1980க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 7204, C/o, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
7204

## தேவை

லொறி லைசென்ஸ் உடன் அனுபவமுள்ள இரண்டு சாரதி உடனே தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் பிற்பகல் நாலு மணிக்குப் பின் உடன் வந்துசந்திக்கவும். ஜெயசீலன், கோண்டாவில் இருபாலை ரோட், கோண்டாவில். 7214

## விற்பனைக்கு

தலையாழி வைரவர் கோயிலுக்கு அருகாமையில் சபாபதி வீதியில் காணி பரப்பு இரண்டு வரையில் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் கீழ்க் காணும்விலாசத்தில்தொடர்பு கொள்ளவும். தி. அமரசிங்கம், 225, சபாபதி வீதி, தலையாழி, கொக்குவில். 7213

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த சிங்காரவேல் கதிரவேற்பிள்ளை என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்,

..... மரணமெய்நியவர் தங்கம்மா இராசநாயகம் நடராசாவின் கைம்பெண், இமையாணன், பருத்தித்துறை.

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/23

எதிராக

1. சிங்காரவேல் கதிரவேற்பிள்ளை பெண் கமலா, குளோ ஒழுங்கை, தெல்லிப்பளை,
2. வேலுப்பிள்ளை சிவப்பிரகாசம் பெண் சிவகாமி அம்மா, செம்பட்டோலை, இமையாணன், வல்வெட்டித்துறை,
3. சின்னத்தம்பி சபாபதிப்பிள்ளை, புத்தூர் மக்கள் வங்கிக்கெதிராக, புத்தூர்.
4. சின்னத்தம்பி அம்பிகைபாகன், 556, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
5. முருகேசபிள்ளை ஒப்பிலாமணி, பெண் புவனேஸ்வரி, 556, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
6. சிவசுப்பிரமணியம் பத்மநாதன் பெண் பத்மாவதி, 28/2, ஒட்டுமடம் ரோட், யாழ்ப்பாணம்.

—எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ஆந் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்

**மூ. நல்லலிங்கம்**
பதிவாளர்

1980-ம் ஆண்டு மாசிமாதம் 22-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

காரணம் காட்டும் திகதி 31-10-1980க்குநீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி.
ஒப்பம்
மூ. நல்லலிங்கம்
பதிவாளர்

7207

## பருத்தித்துறை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் (வ து)
பருத்தித்துறை.

## பகிரங்க ஏலவிற்பனை

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் மொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் கழிவுப் பொருட்கள் (கழிவு மா, கழிவு சீனி, பட்டாணிப்பருப்புஆகிய மற்றும் பொருட்கள்) எதிர் வரும் 01-11-80 சனிக்கிழமை காலை 10-00 மணிக்குச் சங்கத்தின் மொத்தக் களஞ்சியத்தில் பகிரங்க ஏலத்தில விற்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

1980-10-27.

7212

## அம்பனுக்கு உரக் களஞ்சியம்
(நெல்லியடி)

அம்பன் கமநலசேவை நிலையத்திற்கு புதிய உரக்களஞ்சியமொன்று நிறுவப்படவுள்ளது. சுமார் 28,000 ரூபா செலவில் நிறுவப்படவுள்ள இக்களஞ்சியசாலையின் கட்டிட வேலைகளை அம்பன் கிராம அபிவிருத்திச்சங்கம் மேற்கொள்ளவுள்ளது.

## சத்திர சிகிச்சை அரங்கு
(சுழிபுரம்)

யாழ்ப்பாணப் பகுதியில், முதன்மையும் பல்வகைச் சிறப்பும் கொண்ட தனியார் சத்திர சிகிச்சை அரங்கு சங்கானையில் திறந்து வைக்கப்பட்டமை இப்பகுதி மக்களுக்கு ஓர் வாய்ப்பாக அமையும். ஆதலால் இவ் அரங்கை இங்கு நிர்மானித்த வைத்திய கலாநிதி செ. நகாநாதன் தம்பதிகளை நாம் பாராட்ட வேண்டும். மகப்பெறுவும் பிணிதீர் மனையுடன் திறக்கப்பட்ட சத்திர சிகிச்சை அரங்கு சிறப்புடன் செயல்பட நாம் எமது ஒத்துழைப்பை வழங்குவோம் "இவ்வாறு சங்கானையில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட சத்திர சிகிச்சை அரங்கை திறந்து வைத்து பேசிய வைத்திய கலாநிதி எஸ். சேவியர் குறிப்பிட்டார்."

## தையல் பயிற்சி நிலையம்
(சுழிபுரம்)

சுழிபுரம் சத்தியக் காட்டு சந்தைக்கு அருகாமையாச வுள்ள பிரதானவீதியில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்
ஐப்பசி மாதம் 14-ம் திகதி
(வியாழக்கிழமை)
(30-10-1980)

மேடம்: கற்றசுனால் பயன் இன்று கட்டாயம் கிட்டும். அறிஞர் போற்றுவர் தொழிலில் முன்னேற்றம் உண்டு. பிரயாண சுகமும் உண்டு.

இடபம்: அதிஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம். திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகம் அளிக்கப்படும்.

மிதுனம்: அவசர முடிவு ஆபத்தில் மாட்டிவைக்கும். குடும்பத்தில் பதட்ட நிலை தென்படும். எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

கடகம்: பணவிவகாரங்களில் அதிக கவனம் செலுத்தவும். தொழில் துறையில் சிலசிக்கல்கள் தோன்றலாம். எந்த விடயத்திலும் பொதுவாக ஒரு தடுமாற்றம் தென்படும்.

சிங்கம். மேடைப் பேச்சாளர் பெரும்புகழ் அடைவர். நாடகக்கலைஞர்களுக்கு நன்மையபன தினம். இனபந்துக்களின் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு.

கன்னி: வெளியிடத்துப் பயணம் வேதனையைத்தரலாம் வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. பொருள் வரவில் மந்தநிலை காணப்படும்.

துலாம்: மனம்போல் யாவும் நடக்கும். மாது வழியால் மகிழ்ச்சிதரும் செய்தியும் கிடைக்கலாம். கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு.

விருச்சிகம்: தெளிந்த மனம் தெய்வசிந்தை தேடியது கிடைக்கும் அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு.

தனுசு: வேவுகணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் நண்பர் ஒருவருடன் பகைத்துக்கொள்ள நேரிடும். வயிற்றில் கோளாறு தோன்றக்கூடும். சுகாதாரம்வேண்டு

மகரம், குடும்பத்தில் மகிழ்ச்சி தோன்றும். செலவினங்கள் கட்டுப்படியாக இருக்கும். களஸ்திரவழியால் லாபமும் கிடைக்கும்.

கும்பம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று அம்பலமாகலாம் அக்கினி ஆயுதபீடைக்கும் இடமுண்டு பகுவம்.

மீனம்: நல்லதைச் செய்வீர்கள் சமூகத்தில் மதிப்பு உயரும். பிதாவழியால் லாபமும் உண்டு. பெரியவர் ஒருவரின் ஆதரவும் தப்பாமல் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
**க. வேலுப்பிள்ளை**

## வாழ்த்துச் செய்தி

புதுடில்லி, அக். 29 துருக்கியின் தேசியதினம் இன்று நடைபெறுவதை யொட்டி துருக்கி அதிபருக்கு இந்திய ஜனதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார். (வெ)


FOR IMMEDIATE SALE!

CROMPTON GREAVES
SINGLE PHASE MOTORS
¼ H. P. to 2 H. P.
THREE PHASE 5½ H. P

CROMPTON GREAVES
with Oil Bath Starter
Diesel Engines 6.5 H. P
Air Cool — Petter Type

Limited Stock
Special Discount for Dealers

RAZZAK & CO.,
83, KANDY ROAD, GAMPOLA. (C.P)
Telephone: 510 Gampola


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## 1981–ம் ஆண்டு வாகன இலக்கத் தகடுகளுக்கான கேள்விகள்

1981-ம் ஆண்டுக்குத் தேவையான கீழ்க் குறிப்பிடப்படும் வாகன இலக்கத் தகடுகளுக்கான கேள்விகள் எதிர்வரும் 13-11-80-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாவும் அரக்குமுத்திரையிடப்பட்டு க. பொ. 20/80 என்னும் இலக்கமிட்டு "மாநகர ஆணையாளர்", யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும் கேள்விகளுடன் மாதிரித் தகடுகளும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். சித்தி பெறும் கேள்விக்காரர் குறிப்பிடப்படும் தகடுகளை எதிர்வரும் 31-12-80-ந் திகதிக்குப் பிந்தாமல் விநியோகிக்க முடியும் என்பதற்கிணங்கிச் சபையுடன் ஓர் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

### விபரம்

தகடுகள் யாவும் "எனமல்" தகட்டில் இலக்கத்துடன் பதித்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| யா. து. வ. | ..... | 10,000 | தகடுகள் |
| யா. வா. து. வ. | — | 200 | ,, |
| யா. கை. வ. | — | 50 | ,, |
| யா. ஒ. மா. வ. | — | 25 | ,, |
| யா. இ. மா. வ. | — | 25 | ,, |
| றி. வ. | — | 05 | ,, |
| நாய் தகடுகள் | — | 150 | ,, |

**க. சிவஞானம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
24-10-80.

7211


நவம்பர் 04 புதிய வரவு - செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். விலைகள் அதிகரிக்கப்படலாம். தேவைக்கு முந்துங்கள் கைத்தொழிலாளர்களுக்கு அவசியமாக தேவைப்படும் யந்திரம். இக்குவது சுலபம். நிமிடக்கணக்கில் அதிக பயன்பாடு, சீனாவில் உற்பத்தி செய்யப்பட்டது.

POLY SEALER "பொலித்தீன் ஒட்டுவது"
விலை ரூ 895–00 மட்டுமே.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு
மற்றும் பல பொருட்களை நாமே இறக்குமதி செய்து விநியோகம் செய்கின்றோம்.

✱ பலவர்ணங்களில் படுக்கையறை விளக்குகள்,
✱ எவர்சில்வர் பாத்திரங்கள் ✱ எலக்ரோபிளேட்டிங் பாத்திரங்கள்
✱ சுகாதார சாதனங்கள் வீடுகளுக்கு பொருத்தும் மலசல பேசின்கள், தொட்டிகள், முகம்கழுவும் பேசின்கள்
✱ சைக்கிள் உப உறுப்புக்கள் ✱ காஸ் குக்கர்கள்
✱ வர்ண கிளாஸ்கள் ✱ தேமஸ் பிளாஸ்குகள்

இன்னும் பல பொருட்கள் கையிருப்பு முடியுமுன்னர் வாங்கிக் கொள்ளுங்கள்
வியாபாரிகளுக்கு மொத்த விற்பனையுண்டு

இறக்குமதியாளரும் விற்பனையாளரும் :-

முகமதலி அப்துலலி

5 - 7, பெரியகடை, யாழ்ப்பாணம், போன்: 515.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்மநாதன் வீட்டில் வைத்து முதலாம் எதிரியிடம்

# "பிள்ளை எங்கே? பிள்ளை எங்கே? என்று கமலத்தின் தாயும் பேத்தியும் கேட்டபடியே இருந்தனர்"

## கோர்ட் மொழி பெயர்ப்பாளர் சிவலிங்கம் சாட்சியம்

(நமது புலோலி நிருபர்)

"கமலத்தைத் தேடிச்சென்றவர்கள் முதலாம் எதிரியைப் பத்மநாதனின் வீட்டிற்குக் கூட்டிவந்தார்கள். அங்கு வைத்துக் கமலத்தின் தாயும், பேத்தியாரும் முதலாம் எதிரியிடம் பிள்ளை எங்கே? பிள்ளை எங்கே? என்று திரும்பத் திரும்பக் கேட்டபடியே இருந்தார்கள்."

இவ்வாறு பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த திருகோணமலை மாவட்ட நீதிமன்ற மொழி பெயர்ப்பாளரும் பொலிகண்டியைச் சேர்ந்தவருமான திரு மயில்வாகனம் சிவலிங்கம் (வயது 35) குறிப்பிட்டார்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1980 பெப்ரவரி 21-ம் திகதி இரவுக்கும் 22-ம் திகதி காலைக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் பொலிகண்டி டியூட்டரி மாணவியான கமலம் இராமச்சந்திரனை (வயது 15) வராத்துப்பளை ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் கொலைசெய்தார்கள் எனவும், கமலம் அணிந்திருந்த 3,600 ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்தார்கள் எனவும் பருத்தித்துறையைச் சேர்ந்த கந்தசாமி, இராஜ்குமார் (ராஜன்) அல்லது வீரப்பன், பொன்சியஸ் பெர்ணண்டோ (றெபி) அல்லது றெபின்சன் ஆகியோருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த திரு. சிவலிங்கம் குறிப்பிட்டதாவது:-

'1980 பெப்ரவரி 21-ம் திகதி எனக்கு ஞாபகமிருக்கின்றது. இறந்த கமலத்தை எனக்கு நன்றாகத் தெரியும். கமலத்தின் வீடு எனது வீட்டிலிருந்து சுமார் 100 யார் தூரத்திலுள்ளது. 21-2-80 அன்றிரவு எனது பிள்ளைக்குச் சுகவீனமாக இருந்தபடியால் மருந்து வாங்கிக்கொண்டு இரவு 9, 9½ மணிபோல் வீட்டிற்கு வந்தேன். அப்போது இறந்த கமலத்தின் பேத்தியாரான கண்மணியம்ம அழுது கொண்டுவந்து தனது பேத்தியாரான கமலம் ரியூஷனுக்குப் போய் இதுவரை வரவில்லை என்று சொன்னார். அப்போது அழகேசுவும் வதிருந்தார்.

பின்னர் காரொன்றில் கமலத்தைத் தேடிப் பருத்தித்துறைப் பஸ் நிலையத்துக்குப் போய் அங்கிருந்து டியூட்டறிக்குப் போனோம். டியூட்டறி பூட்டப்பட்டிருந்தபடியால் டியூட்டறியல கல்வி கற்பிக்கும் ஆசிரியரான ராஜரத்தினம் வீட்டிற்குப்போனோம். அப்போது பத்மநாதனும் கூடவந்திருந்தார்.

### தேடுதல்

'ராஜரத்தினம் ஆசிரியரிடம் கமலத்தைப் பற்றி விசாரித்தபோது சிவன்கோவிலடியில உள்ள பிள்ளையிடம் கேட்டால் தெரியுமென்று கூறிய தற்கிணங்க அங்கு சென்று விசாரித்தோம். பின்னர் இன்பருட்டியில் உள்ள பிள்ளை ஒன்றின் வீட்டிற்குச் சென்றோம். அங்கு விசாரித்த பின்னர் வல்வெட்டித்துறைக்குப் போனோம். வல்வெட்டித்துறையில் 1-ம் எதிரியின் தாயைச் சந்தித்து விசாரித்தபோது 1-ம் எதிரி பருத்தித்துறையிலுள்ள பற்றக் பெர்ணண்டோ என்பவருடன் வேலைசெய்வதாகச் சொன்னார்.

'நாங்கள் பருத்தித்துறைக்குச் சென்றது பற்றிக் பெர்ணண்டோவின் வீட்டின் முன்புறத்தில் காரை நிறுத்தினோம். அங்கு கமலத்தின் தாயார், பத்மநாதன், திருமதி பத்மநாதன் ஆகியோர் பற்றிக் பெர்ணண்டோவிடம் விசாரித்தபின்னர் பற்றிக் பெர்ணண்டோ 1-ம் எதிரியின் வீட்டைக் காட்டுவதாகக் கூறிக் கூட்டிச் சென்றார். நாங்களும் அவர்களுக்குப் பின்னால் சென்றோம். நாங்கள் அப்படிச் சென்றபோது முன்னையில் இருப்பவர்கள் இருவரும் எங்களுடன் சேர்ந்துகொண்டார்கள்.

### பஸ்ஸில் ஏற்றியதாகச் சொன்னார்

'நானும் அழகேசுவும் 1-ம் எதிரியின் வீட்டிற்குள் செல்லவில்லை. ஏனையோர் உள்ளே சென்று 1-ம் எதிரியைக் கூட்டி வந்தார்கள். அப்போது கமலத்தின் தாய் பிள்ளை எங்கே என்று அவரைக் கேட்டார். 1-ம் எதிரி கமலத்தை 763-ம் இலக்க பஸ்ஸில் ஏற்றிவிட்டதாகக் கூறினார்.

'பின்பு 1-ம் எதிரியைப் பத்மநாதன் வீட்டிற்குக் கூட்டிவந்தார்கள். அங்கேயும் கமலத்தின் தாயாரும், பேத்தியாரும்திரும்பத்திரும்ப பிள்ளை எங்கே என்று கேட்டபடி இருந்தார்கள். அப்போது 1-ம் எதிரி கமலம்பற்றி, பற்றிக் பெர்ணண்டோவின் மகனைக் கேட்கவேண்டுமென்றும், கமலம் தம்பசெட்டியைச் சேர்ந்த செல்வக்குமாருடன் சென்றிருக்கலாமென்றும் சொன்னார். பின்பு பத்மநாதனும் முனை ஆட்கள் இருவரும் 1-ம் எதிரியைக் கடற்கரைப் பக்கமாகக் கூட்டிச் சென்றார்கள். சற்று நேரத்தில் திரும்பிவந்து காரில் போகவேண்டுமென்று கூறினார்கள்.

"1ம் எதிரி கமலத்தைப் பற்றிக் பெர்ணண்டோவின் மகனிடம் கேட்க வேண்டுமென்று கூறியபடியால் கமலத்தின் தாயார் பத்மநாதன், ஏனைய சிலர் ஆகியோர் பற்றிக்பெர்ணண்டோ வீட்டிற்குச் சென்று அங்கு விசாரித்தார்கள்.

"பின்பு பத்மநாதனும் 1ம் எதிரியும் முனையைச் சேர்ந்த இருவரும் காரில் எங்கோ போனார்கள். அப்போது அவர்கள் எங்கே போகிறார்கள் என்று கமலத்தின் தாயாரைக் கேட்டபோது பிள்ளையைக் கொண்டுவருவதற்காகப் போனார்கள் என்று சொன்னார்.

### 1ம் எதிரியுடன் வாக்கு வாதம்

"காரில் சென்றவர்கள் அதிகாலை மூன்று மூன்றரைமணிக்குத் திரும்பிவந்தார்கள். பின்பு 1ம் எதிரிக்கும் கமலத்தின் தாயாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் 1ம் எதிரி அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார்.

கமலத்தின் தாயார் கமலத்தை யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டலில்தேட வேண்டு

(7-ம் பக்கம் பார்க்க)

---

தமிழ்நாட்டில்

# பொலி ஸ்ராஜ்யம் நடப்பதுபோல் இருக்கிறதாம்

## தி. மு. க. தலைவர் கண்டனம்

சென்னை, அக். 28

"தேர்தல் காலத்தில் இளைஞர்களுக்கும், விவசாயிகளுக்கும் பல வாக்குறுதிகளை அளித்துவிட்டு அவற்றை இன்று நிறைவேற்ற முடியாமல் திசை திருப்பும் நடவடிக்கைகளில் தமிழக அரசு இப்பொழுது ஈடுபட்டுள்ளது" என்று, சென்னையில் கூடிய திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

கூட்டத்தின் பின்னர் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி செய்தியாளர்களிடம் பேசுகையில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை விவசாயிகள் மீது திணிப்பதில் அமைச்சர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுகிறது என்று'; தேர்தல் காலத்தில் விவசாயிகளுக்கு வாக்குறுதிகளைத் கொடுத்துவிட்டு அ. இ. அ. தி. மு. க. இன்று பயமுறுத்துகிறது என்றும் தமிழ் நாட்டில் பொலிஸ் ராஜ்யம் நடப்பது போல இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

---

வட்டு - தொகுதயின் குடிநீர்பிரச்னைகளை

# பதவிகாலம் முடியுமுன்னர் தீர்த்துவைக்க உறுதி

(பண்டத்தரிப்பு)

'வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களின் மின்சாரப் பிரச்னையையும், குடிநீர்ப் பிரச்னையையும் 1983-ம் ஆண்டில் எமது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் தீர்த்து வைப்பேன் என்பதை இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்துகொடுப்பது எமது கடமையாகும்.'

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி எம் பி திரு தா. திருநாவுக்கரசு பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலை புதிய கட்டிடத் திறப்புவிழா விழாவிலும், பெற்றோர்தின விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் அருட் செல்வி மேரி சுத்தரீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. திருநாவுக்கரசு புதிய கட்டிடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

'இப்பாடசாலைக்குப் புதிய கட்டிடம் அமைப்பதற்கு நான் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய சிறுபணத்துடன் மேலும் நிதி சேர்த்து ஒரு வசதிமிக்க விஸ்தாரமான கட்டிடத்தை இப்பாடசாலை நிர்வாகம் தமது சுய முயற்சியினால் நிறுவியிருப்பதை பாராட்டுகின்றேன். அரசாங்கம் மூலம் சகல கல்வித் தேவைகளையும் பூர்த்தி செய்து விட முடியாது எமது பகுதி பாடசாலைகளின் கல்வித் தேவைகளை எமது சுய முயற்சியினால் நிறைவேற்ற வேண்டும். இப்பாடசாலை கடந்த ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட புதிய கல்வித் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட பொருட்காட்சியில் யாழ். மாவட்டத்தில் முதலிடம் வகித்திருப்பது எமக்கு மகிழ்ச்சியை தருகிறது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு தொகுதி எம். பி, என்ற முறையில் எனது ஒத்துழைப்பை வழங்க என்றும் ஆயத்தமாயிருக்கிறேன். பாடசாலை பிவிருத்திச் சங்க செயலாளரும், ஆசிரியருமான திரு. சாமுவேல் பெனடிக்ற் வரவேற்புரை நிகழ்த்தினார். வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த திரு உ. ந. தேவ டாட்சம், ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. மாட்டின் செல்லையா, ஆசிரியர் எஸ். கே. பத்மநாதன், பங்குத்தந்தை அருட்திரு. சப நாயகம் அடிகள் ஆகியோரும் உட்பட பலர் இவ்விழாவில் உரையாற்றினார்கள். ஆசிரியர் நீ செபமாலை நன்றியுரையாற்றினார். பரிசில்களை வாழ்வொளி நிலைய அதிபர் அருட் சகோதரி டியூலாலி வழங்கினார். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

---

# ஈரான் - ஈராக் யுத்தம் நீடிக்கிறது!

## 'குசெஸ்தான்' மாகாண தலைநகரில் கடும்யுத்தம்!

லண்டன், அக். 29

ஈரான்-ஈராக் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அணி சேரா நாடுகளில் குழு முயற்சி செய்துவரும் அதேவேளையில், அவ்விரு நாடுகளும்தொடர்ந்து யுத்தம்செய்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின வடபகுதியில் உள்ள நகரங்களை ஈரானியப் போர் விமானங்கள் தாக்கியதாக ஈராக்கின் இராணுவ அறிக்கை கூறுகிறது.

கருங்கடல் மீதாக அமைந்துள்ள பாலத்தை ஈரானியத் துருப்புக்கள் பாதுகாத்துவருவதாகத் தெஹ்ரான் வானொலி தெரிவித்தது.

ஈரானின் 'குசெஸ்தான்' மாகாணத்தின் தலைநகரை ஈராக்கியத் துருப்புக்கள் பலமாகத் தாக்கிவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஈரான்-ஈராக் யுத்தத்தின்போது சிக்குண்ட சுமார் 70 கப்பல்களை அந்த அந்த நாடுகளுக்கு அனுப்பி வைப்பது குறித்து செஞ்சிலுவைச்சங்கம் இவ்விரு நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகக் கூறப்படுகிறது. (வெ)

---

## அஸாம் பிரச்னை

கௌகாத்தி, அக். 29

அசாம் மாநிலத்திலிருந்து பொருட்களை வெளியில் எடுத்துச் செல்வதற்கு இருந்துவரும் தடையை நீக்குவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமென்று மத்திய உள்துறை ஸ்டேட் அமைச்சர் திரு. யோகேந்திர மக்வானா நிருபர்களிடம் தெரிவித்தார்.

அசாம் வெளிநாட்டவர் பிரச்னை பற்றி நிருபர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் கூறியதாவது: இப் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணும்விடயத்தில் மத்தியஅரசு இன்னமும் இருந்துவருவதாகத் தெரிவித்தார். (வெ)

---

## காவலில் 11,500 பேர்

அங்காரா, அக். 29

துருக்கியில் கடந்தமாதம் திடீர்ப் புரட்சியின் மூலம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியபின்னர் சுமார் 11,500 பேர் வரை காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியில் நடைபெற்றுவரும் இராணுவ ஆட்சிக்கெதிராக கிளர்ச்சிசெய்துவரும் தீவிரவாதிகளே காவலில்வைக்கப்பட்டுள்ளதாகத் துருக்கியின் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வெ)

---

வெடிவிபத்தில்

## பலியானோருக்கு நிதிஉதவி

சென்னை, அக். 29

மதுரை மாவட்டத்திலுள்ள வத்தலகுன்று என்ற இடத்தில் நிகழ்ந்த வெடிவிபத்தில் மரணமான, காயமடைந்தவர்களின் குடும்பத்திற்கு மத்திய விவசாய ஸ்டேட் அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் இந்தியப் பிரதமமந்திரியின் உதவிநிதியிலிருந்து 60,000 ரூபாவை வழங்கியுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நிகழ்ந்த இவ்விபத்தில் 43 பேர் பலியானது தெரிந்ததே. (வெ)

---

## நீதிபதிகளின் செயற்பாடு

புதுடில்லி, அக். 29

"தனது விருப்பத்திற்கேற்ப நீதிபதிகளை நியமிக்க அரசு விரும்பவில்லை. நீதிபதிகள் அரசியல் சாசனத்திற்கு இயையவே செயல்படவேண்டும். அவர்கள் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு ஆதரவாகச் செயல்படமுடியாது" என்று இந்திய சட்ட நீதித்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் ஆந்திரப்பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுள் மீதுகொள்ளும் அன்பு காரணமாக ஒரு மனிதன் உலகத்தையும், தனக்கு மிகப் பிரியமான தன் சரீரத்தையும் கூட மறந்து விட நேருமாயின அந்த அன்பு பிரேமை எனப்படும் சைதன்னிய தேவரிடம் பிரேமைபிளிர்ந்தது.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### தமிழ் மாணவர்களுக்கு தனியார் மருத்துவக் கல்லூரி

பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக ஜேயல்கல்லூரி மாணவர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது, பலதகைமையுள்ள தமிழ் மாணவர்களுக்கு நிச்சயம் ஏமாற்றம் அளித்திருக்கும். ஆயினும் எமக்கு எவ்வித அதிசயத்தையும் ஏற்படுத்தவில்லை.

திறமைச்சித்தி பெறும் மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்க முடியாத நிலையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு திட்டமொன்றை வகுக்க அதிகாரம் உண்டு.

அந்த அதிகாரத்தை அது எவ்வாறு செயற்படுத்துகின்றது என்பதை நாம் இனிமேல் வாதாடி காலங் கழிப்பதில் எவ்வித பலனுமில்லை.

''திறமைக்கு மாத்திரம் முழுக்க முழுக்க இடம் கொடுத்தால் கொழும்பு யாழ்ப்பாணம் போன்ற பெரிய நகரங்களிலுள்ள மாணவர்கள் மாத்திரமே பல்கலைக்கழகத்திற்குச் செல்ல முடியும்'' என்ற பல்லவியில் நடைபெறும் அநீதியை நாம் புரட்டிப் புரட்டிப் பேசுவதானால், இதனால் பெருமளவிற் பாதிக்கப்படும் பெருந் தொகையான தமிழ் மாணவர்களுக்கென்ன செய்ய முடியும்?

குறிப்பாகக் கூறுங்கால் இன்று மருத்துவதுறைக்கே பெரிய போட்டி ஏற்பட்டிருக்கிறது. காரணங்களை விளக்கவேண்டியதில்லை. விடயத்தில் உடனே இறங்குவதானால் வருடா வருடம் நூற்றுக்கணக்கான திறமைசாலிகள் பல்கலைக்கழக அனுமதி பெறாது தவிக்கும் நிலை ஏற்படாது.

சந்தர்ப்பம் உண்டானால் இவர்களிற் பலர் நாட்டிலே, ஏன் சர்வதேசரீதியிலே பெரும் புகழ் படைத்த வைத்திய நிபுணர்களாக வளர்ச்சியடையலாம் இவர்களிற் பலர் பணவசதியில்லாமலிருந்தும், தங்கள் திறமையால் யாழ்ப்பாண நகரம் போன்ற வசதியுள்ள பாடசாலைகளில் கல்வி கற்றுத் தேறினர். இந்தஒரு தப்பின் காரணமாக இவர்களின் வருங்காலம் இவர்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்காத நிலைமை அடைவதை நாம் பார்த்து வாளாவிருக்கலாமா?

இன்றைய அரசு தனியார் துறைக்கு அவசியமான தகுந்தசந்தர்ப்பங்கள் வழங்கி வருவது நாம் வரவேற்கவேண்டிய கொள்கை போக்குவரத்து, தொழில், வீடமைப்பு, வர்த்தகம், கல்வியுங்கூட தனியார்துறையின் சேவைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன தனியார் பாடசாலைகளுக்கு அரசாங்கம் வேண்டிய உதவி செய்து வருகின்றது.

மருத்துவக் கல்விக்குரிய தட்டுப்பாட்டை உணர்ந்து கொழும்பு வடக்கில் தனியார் மருத்துவக்கல்லூரி ஒன்றை பொது மருத்துவக்கலாநிதிகள் ஒன்று சேர்ந்து ஸ்தாபிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இது ஒருபாரிய திட்டமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. கல்லூரியிற்சேர தகைமை பெற்ற மாணவர் பெருந் தொகைப்பணத்தைவருடா வருடம் கட்டணமாக இறுக்க வேண்டும்.

திட்டம் எவ்வளவு பெரிதானாலும் அதன் அவசியம் அதனைத் தவிர்க்கமுடியாத நிலை ஒன்று தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்டிருப்பதை எமது சமூகமும் அரசும் கலந்தாலோசிப்பது நல்லபலன் தரும்.

காலதாமதமில்லாமல் தமிழ்ச் சமூகத்தின் தலைவர்கள், தனவந்தர்கள், கல்விமான்கள், மருத்துவத் துறையில்திகழும் நிபுணர்கள் பேராசிரியர்கள் இந்த விடயத்தையிட்டு முதற்படி எடுக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

எடுத்ததற்கெல்லாம் அரசுடன் பயனற்ற வாதம் வளர்த்து காலத்தைக் கழிக்காமல், அரசின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது யாழ்ப்பாணத்திலே ஒரு தனியார் மருத்துவக் கல்லூரியை, யாழ், பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடத்த தகுந்த நடவடிக்கைகள் எடுப்பது அவசியமானது, அவசரமானதும் கூட.

பண வசதி படைத்த மாணவர்களுக்கே இக்கல்லூரி பயன்படுவதல்ல; திறமையான மாணவர்கள் உபகாரச் சம்பளமூலம் இடம் பெறுவது முக்கிய அம்சமாக அமைய வேண்டும்.

தேவையானால், முடியுமானால் தனியார் சிரேட்ட கல்லூரி ஒன்றில் உடனடியாக இதனை ஆரம்பிக்கலாம்; தனியார் மருத்துவசாலை ஒன்றினைப் போதனைக்குரிய வசதிகளுடன் தயாராக்கி மருத்துவக் கல்வி தொடர்ந்து நடத்தவும், ஒரு மூன்றாண்டுத் திட்டம் மூலம் இம்மாபெரும் தேவையைப்படிப்படியாகப் பூர்த்தி செய்யலாம்.

எங்கள் மக்களிடம் தேவையான பணம் உண்டு; நிரம்பிய ஆற்றல் உண்டு. திட்டம் இட்டுக் காரியத்தில் சித்தி பெறும் திறமை உண்டு. கல்வி கற்பிக்கும் மேதைகள் பலர் பல இடங்களில் பணிபுரிகின்றனர். இவற்றையெல்லாம் ஒருங்கு சேர்த்து வெற்றி [illegible] உணர்வுதான் வேண்டும்.

"கூட்டணி எம். பிக்களின்

# வேலைவங்கிப் படிவங்கள் நிராகரிக்கப்படவில்லை!"

## பண்டிதர் கேள்விக்கு சபையில் பதில்

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலை வங்கி மூலம் நியமனம் வழங்கப்பட்ட 430 பேரில் 417 பேர் கூட்டணி எம். பிக்களினால் சிபார்சு செய்யப்பட்டவர்களாவர்.

இவ்விபரத்தை நாடாளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு வின்சன்ட் பெரேரா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கேட்ட கேள்வி ஒன்றுக்கு திட்ட அமுலாக்கல் பிரதியமைச்சரின் சார்பில் பதிலளித்தபோதே அமைச்சர் வின்சன்ட் பெரேரா மேற்கண்ட விபரத்தை வெளியிட்டார்.

கூட்டணி எம். பிக்கள் நிரப்பிக் கொடுத்த வேலை வங்கிப் படிவங்களை நிராகரிக்குமாறு முடிவு எதுவும் செய்யப்படவுமில்லை யென்றும் அந்தப் பதிலில் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் திட்ட அமுலாக்கல் பிரதியமைச்சரிடம் கேட்டகேள்வியும் அதற்கு அளிக்கப்பட்ட பதிலும் பின்வருமாறு:-

கேள்வி: 20-12-1979 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட பதிலொன்றின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலைவங்கி மூலம் 430 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது தெரியுமா?

பதில்; ஆம்.

கேள்வி: இவ்வாறு நியமனம் வழங்கப்பட்டவர்களில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த எம். பிக்களால் வேலைவங்கிப் படிவம் பூர்த்தியாக்கப்பட்டு சிபார்சு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

பதில்: 417.

கேள்வி: மிகுதிப் பேர் எவ்வாறு நியமிக்கப்பட்டனர்? மானிப்பாய் எம். பி 4, காங்கேசன்துறை ஐ. தே. க. அமைப்பாளர் 1, கோப்பாய் எம். பி. 1. (வேலை வங்கியிற் பதிவு செய்தவர்) ஐ. தே. க. அமைப்பாளர் 7. மொத்தம் 13.

கேள்வி: கூட்டணி எம். பிக்கள் படிவம் நிரப்பிக் கொடுத்துச் சிபார்சு செய்தவர்களில் ஒவ்வொருவருக்கும் எத்தனை பேர் வீதம் நியமனம் வழங்கப்பட்டது?

பதில்; பின்வாறு அமையும் நல்லூர் 52, சாவகச்சேரி 26, கோப்பாய் 49, வட்டுக்கோட்டை 80, காங்கேசன்துறை 98, மானிப்பாய் 64, ஊர்காவற்றுறை 8, பருத்தித்துறை 15, யாழ்ப்பாணம் 1, கிளிநொச்சி 24.

கேள்வி: தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் நிரப்பிக் கொடுத்துச் சிபார்சு செய்த வேலைவங்கிப் படிவங்களை நிராகரிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டதா? அவ்வாறாயின் எப்போது?

பதில்: இல்லை.

# 'சகலரும் ஆலயம்செல்வதே மேன்மைகொள் சைவநீதி"

## சைவத்திருமுறை மாநாட்டில் பரு. நீதிபதி

(புலோலி நிருபர்)

''எமது சைவசமயத்தில் உள்ள குறைபாடுகள் களையப்பட்டு, சீர்திருத்தப்படும் போது உலகமெங்கும் சைவ சமயத்தின் ஒளிபரப்பப்படும். சகல ஆலயங்களும் சகலரும் வழிபடுவதற்காகத் திறந்து விடப்படவேண்டும். சைவசமயத்தவர்கள்அனைவரும் ஆலயங்களுக்குச்சென்று வழிபட்டு இறைவனின் அருளைப்பெறுவதற்கு எதுவிததடையும் இருக்கக்கூடாது. இதுவே மேன்மைகொள் சைவநீதியாகும்.''

இவ்வாறு, கீரிமலை சிவநெறிச்கழகமும், பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையும் இணைந்து ஒழுங்குசெய்த சைவத்திருமுறை மகாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் பண்டிதர் வித்துவான் திரு. க. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இச் சைவத்திருமுறை மகாநாட்டை பிரம்மஸ்ரீ ச. வரதராசக்குருக்கள் கழகக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்துபேசிய நீதவான் திரு.மகேசன் கூறியதாவது:

''சைவமும், தமிழும் எமது இரு கண்கள். சைவம் இன்றேல் தமிழ் இல்லை, தமிழின்றேல் சைவமில்லை என்று சொல்லுமளவிற்கு சைவமும், தமிழும் பின்னிப் பிணைந்துள்ளதை நாம் அறிவோம், திருமுறைகள் எமது அருமறைகள். திருமுறைகள் முத்தமிழிலும் விரவி இருக்கின்றன. திஞ்சொற்பனுவல்கள் என்ற முறையிலே இயல் தமிழும் பண்ணோடு தாளமறுத்துப் பாடும் பாடல்கள் என்றமுறையிலே இசைத்தமிழும் ராக தாளத்தோடு அபிநயபாவத்துடன் ஆடுவதற்கான பதங்கள் என்றமுறையிலே நாடகத்தமிழும் திருமுறையிலே இருக்கின்றன.

''சோழர் காலத்திலே திருமுறைகள் பண்ணோடும் பரதத்தோடும் பயிலப்பட்டன. திருமுறைகளைப் படிப்போரும் கேட்போரும் இறைவனை நினைந்துருகி ஆனந்த பரவசமடைவார்கள். எமது சமயத்தலைவர்கள் இறைவனின் அருள் பெற்று, அவனை நினைந்து உள்ளம் உருகி தலையாரக்கும்பிட்டுக் கூத்தாடிப் புகழ்ந்து பாடிய பாடல்கள்தான் எமது பொக்கிஷமான திருமுறைகள். திருமுறையில் பக்திமாற்றம் புத்துயிர் பெற்றுத்தழைத்ததனாலேயே சைவமும், தமிழும் பக்தியைப் பெற்றன. பக்தி மாற்றமுறையினாலே சைவம் முக்தி நிலையை அடைவதற்கு வழிகாட்டுகின்றது.

சைவசமயத்தைப் பரப்புவதற்குநாமெல்லோரும் நடவடிக்கைஎடுக்க வேண்டும். இதற்கு சைவசமயத்திலுள்ள சில குறைபாடுகள் அகற்றப்பட வேண்டியது மிகமுக்கியமானதாகும். குறிப்பாக சாதிக் குறைபாடுகளை நீக்கிச் சைவ சமயத்தைச் சீர்திருத்த வேண்டும். ஆலயப்பிரவேசம் எல்லா ஆலயங்களிலும் நடைபெற வேண்டும், திருமுறைகள் குறிப்பிட்ட ஒருவருக்குத்தினருக்கு உரிய பொக்கிஷமல்ல. சைவர்கள் அனைவருக்கும் சொந்தமானது. எனவே திருமுறைகளைஓதி அதனால் வரும் பலாபலன்களையும், அருளையும் பெற்று நித்தியமான பேரின்பத்தைப் பெறவேண்டும்'' என்றார்.

மாநாட்டிற்கு தலைமை வகித்த பண்டிதர் திரு. கிருஷ்ணபிள்ளை உரையாற்றுகையில், திருமுறை, சைவர்களாகிய எங்களுக்குக் கிடைத்த பொக்கிஷமாகும். திரு என்ற சொல்லைத்தவிர தமிழ்மொழியிலே மேலான சொல் ஒன்றும் இல்லை. திரு என்பது மேலான உயர்ந்த, எல்லோராலும் கவரப்படுகின்ற, தெய்வீகத் தன்மை வாய்ந்த என்ற பல கருத்துக்களைக் குறிக்கின்றன. முறை என்பது நூலைக் குறிக்கின்றது. எனவேதிருமுறைநூல் என்பதாகும்தெய்வீகத்தன்மை தெய்வீகத் தன்மை கமழும் நூலான திருமுறைகளை ஓதுவதற்கும், கேட்பதற்கும் நாம் செய்த பாக்கியம் எமக்குக் கிடைத்த வரப்பிரசாதயாகும்'' என்றார்.

சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் உரையாற்றினார். தும்பளைசெட்டி மெதடிஸ்தமிஷன்தமிழ் வித்தியாலயம், கரணவாய் தாமோதர வித்தியாலயம், வல்வை பகளிர் மகாவித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்

(8-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### முத்திரைச் சந்தையில் பஸ் பிரயாணிகள் படும் அவதி

மழை, வெயிலுக்கு ஒதுங்குவதற்கு நல்லூர் முத்திரைச் சந்தையில் ஒரு நிலையான ஒதுக்கிடம் இல்லை. இங்கே நிரந்தரமான பஸ் தரிப்பிடம் இல்லையென்பது யாவருமறிவர்.

முத்திரைச் சந்தை தரிப்பிடத்துக்குரிய 1, யாழ். பருத்தித்துறை வீதி பஸ்கள் (இல-250, 751, 752) 2. காரை நகர் டிப்போ பஸ்கள் (இல-736, 782) 3. கிளிநொச்சி, குஞ்சுக்காய், சாவகச்சேரி, பஸ்கள்) 4. கச்சேரி- நல்லூர் வீதிவழியாக காலையிலும்மாலையிலும் யாழ் டிப்போ (இல: 793) பஸ்கள் ஆகியன வந்து போகின்றன. ஆனால் ஒன்றுக்காவது நிரந்தர பஸ் நிலையம் இல்லை.

கச்சேரி, நல்லூர் வீதிவழியாக வரும் பஸ் நிலையான ஒரே இடத்தில் நிற்பாட்டுவதில்லை. இதனால் பொது மக்களும், பாடசாலைப் பிள்ளைகளும் வெகுசிரமத்துக்கு உள்ளாகின்றனர். மக்கள் பஸ்களைக் [illegible] தவறவிடுவதையும் தினசரி காணலாம். இ. போ. ச. உயர் அதிகாரிகள் நேரில் இதைக் காண வேண்டும், பிரதானமாக காலை நேரத்தில் மக்கள் படும்அவத்தை.

இ. போ. ச. நிரந்தர நிலையங்களையும், ஒதுக்கிடங்களையும் அமைக்கவேண்டும். அத்துடன் பஸ் ஊழியர்களுக்கு இன்ன இடத்தில் தான் பஸ் நிற்பாட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்தக்கூடாதா?

யாழ். மாநகர சபையும் இது பற்றி ஆராய்ந்து ஆவன செய்யவேண்டும் செய்வார்களா?

வெ. சு. நடராசா
பருத்தித்துறை வீதி.
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிவியல் பூஞ்சோலை

## ஒட்டக்கூத்தருக்கு ஓங்கும் புகழ் அளித்த "பிள்ளைத்தமிழ்"

-- பற்றிமாசரன் --

தமிழ் இலக்கியப் பரவையில் கவிஞர்கள் எனும் படகோட்டிகள் தமது மனக் கருத்தை ஏற்றிவரக் கண்டு பிடித்த பல்வகை மரக்கலங்களுள் 'பிள்ளைத்தமிழ்' எனும் பிரபந்தவகை சிறப்புடையதொன்று. புலவன் தான் போற்ற வந்த தலைவன் தலைவியை குழந்தையாக்கி மூன்று முதல் இருபத்தொரு மாதத்துக்கு இடைப்பட்ட மனித வாழ்க்கை வட்டத்தின் வளர்ச்சியை சுட்டிக்காட்டி இரண்டு திங்களுக்கு ஒன்றாக 10 பருவங்களாக வகுத்துப் பாடுவது பிள்ளைத் தமிழின் புறஅமைப்பாகும். ஆசிரியக்கலிப்பா, விருத்தம் என்பனவற்றால் பாடப்படும். இப்பிரபந்தம் பரணி, உலா போன்று தலைவன் பெருமைபாடும் படைப்பாகவே பரிணமித்தது. சிறு பிள்ளைப் பருவத்தை அடிப்படையாகக் கொண்ட பாட்டுடைத் தலைவனின் குலமரபு சாதனைகள் பெருமைகளை வகைப்படுத்திக் கூறுவதே பிள்ளைத் தமிழின் உள்நோக்கமாகும்.

இது ஆண்பாற் பிள்ளைத் தமிழ் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைகளாகக் காணப்படுகின்றன. ஆண்பாற் பிள்ளைத்தமிழில் காப்பு, அம்புலி, சிற்றில், சிறுபறை போன்றவை கூறப்படும். பெண்பாற் பிள்ளைத்தமிழில் கழங்கு, அம்மானை சிறுசோறுக்கல் ஊஞ்சல் போன்றவை கூறப்படும்.

தொல்காப்பிய காலத்திலிருந்து பிள்ளைத்தமிழின்பிறப்பு ஆரம்பமாவதாக கூறப்பட்டாலும் இதற்கு போதிய சான்றுகள் இல்லை. இருப்பினும் தொல்காப்பியத்தில் குழந்தைப் பருவப் பின்னணியை கொண்ட பாடல்கள் இருந்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. கலித்தொகை ஐங்குறுநூறு என்பனவற்றில் பிள்ளைத் தமிழ்பற்றிய செய்திகள் உண்டு. இளங்கோ கூட தனது பேரிலக்கியத்தில் அம்மானை ஊசல்வரி போன்ற பிள்ளைத்தமிழ் சாயல்களை காட்டுவதைக்காணலாம்.

ஆரம்பத்தில் சாதனைநாயகர்களின் புகழ்பாடப் பிறந்த பிள்ளைத்தமிழ் பின்னர் பக்திச் சுவையை வெளிப்படுத்தும் கருவியாக கூர்ப்பு அடைந்தது என்றால் மிகையாகாது. சிவனடியார்களும் வைணவ ஆழ்வார்களும் இறைவனைப் பிள்ளையாக கண்டு பக்திப்படைப்புகளை பிள்ளைத் தமிழ் வாயிலாக வெளிக்கொணர்வதைக் காணலாம். குலசேகரர் தன்னைத் தாயாகவும் கண்ணனைக் குழந்தையாகவும் கொண்டுபாடினார். திருமங்கையாழ்வாரும் தம்மைத்தாயாக கொண்டு பாடினார். இவரின் பெரியதிருமொழியில் சப்பாணிப்பருவம், வெண்ணெயுண்ட மாட்சிமைப் பருவத்தில் கண்ணனின் பிள்ளைம்பராயம் கூறப்படுகிறது. ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில் சிறுமியர் தம் சிற்றிலைச் சிதைக்கவேண்டாம் என்று கூறுவதாக உள்ளது. பிள்ளைத்தமிழின் உண்மையான பாடலை பெரியாழ்வாரின் திருமொழியில்காணலாம்.

இவர் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து அவனின் பிறப்பு முதல் வாலிபப்பருவம் ஈறாக பலபகுதிகளை அமைத்து உருக்கமாக பாடி பிள்ளைத்தமிழின் ஆதிகர்த்தா என்ற சிறப்புப் பெயரை பெறுகிறார். இவருக்குப் பின்னர் பெருந்தொகையானோர் இறைவனை குழந்தையாக்கி குதூகலிப்பதைக் காணலாம். தன்குழந்தையின் நிலையை அனுபவித்து நிற்கும் தாயாக பெரியாழ்வார் திருமொழியில் காணப்படுகிறார். பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ் தாயன்பின் வெளிப்பாடெனவும் ஒட்டக்கூத்தர் பிள்ளைத்தமிழ் சோழர் பெருமையின் சொற்காட்சி எனவும் போற்றப்படுகிறது.

மதுரை மீனாட்சி பிள்ளைத் தமிழ் குமரகுருபரராலும், சேரன்முருகன் பிள்ளைத்தமிழ் அந்தகக் கவிராயராலும் பாடப்பட்ட குறிப்பிடத்தக்க பின்னைய பிள்ளைத்தமிழ் நூல்கள்.

சமயசார்பாக மாறியபின் பிள்ளைத்தமிழ் தலமுறை, தெய்வப் ஞானசாரியர் போன்றோரேயே திரும்பத்திரும்ப பிள்ளைத்தமிழ்கள் வெளிப்படுத்த முயன்றமையால் இப்பிரபந்தம் வீழ்ச்சிப்போக்கை காட்டத் தொடங்கியது. ஆயினும் 20ம் நூற்றாண்டில் காந்திப்பிள்ளைத்தமிழ், அண்ணாத்துரை பிள்ளைத்தமிழ் என்பன எழுந்து பிள்ளைத்தமிழ் பிரபந்தவகையின் இறவாத்தன்மையை இயம்புகின்றன.

(8-ம் பக்கம் பார்க்க)

## இறைமையின் மூவகைத் தோற்றம்

ஏ. வி. டைசி இறைமையை சட்ட இறைமை, அரசியல் இறைமை என இரு தோற்றங்களாக நம்முன் காண்பிக்கின்றார். சட்ட இறைமை என்பது அரசினுடைய சட்டத்தின் அடிப்படையில் தோன்றிய இறுதி அதிகாரமேயாகும். ஆனால் பேராசிரியர் லாஸ்கி 'சட்ட இறைமை அதற்குப்பின்னால் மறைந்து நிற்கும் வேறு ஒரு சக்திக்கு தலைவணங்க வேண்டியுள்ளது'' என்கிறார். இதுவே அரசியல் இறைமை. கில்கிரைஸ்ட் எனும் அரசியல் மேதை ''அரசியல் இறைமையானது சட்டத்திற்குப் பின்னால் காணப்படும் பல்வேறுபட்ட செல்வாக்குகளின் தொகுப்பாக'' விளங்குகிறது இந்த அரசியல் இறைமை என்கிறார்.

இங்கிலாந்தில் பாராளுமன்றம் சட்ட இறைமையை பிரயோகிக்கிறது. அமெரிக்காவில் அரசியலமைப்பை திருத்தும் குழுவிலும் சட்ட இறைமை காணப்படுகிறது. இந்தியாவில் சட்ட இறைமை அரசியல் அமைப்பிடம் உள்ளது. ஆனால் பொதுவாகப் பாராளுமன்றம் தான் சட்ட இறைமையைப் பிரயோகிக்கும்களமாக காட்சியளிக்கின்றன.

சட்ட இறைமைக்கு அரசின் விருப்பத்தைச் சட்டப்படி தெரிவிக்க உரிமையுள்ளது. ஆனால் அரசியல் இறைமை மக்களுடையதாக இருப்பினும் மக்களின் விருப்பதை உடனுக்குடன் தெரிவிக்கும் வலிமை அதற்கு இருக்கிறதா எனும் சந்தேகம் தவிர்க்கமுடியாத ஒன்று. இதனால்தான் போலும் ''தேர்தல் நாளில் மட்டும் இங்கிலாந்து சுதந்திரமாக உள்ளது'' என்கிறார் ரூசோ. ஆனால் அரசியல் இறைமை வாக்காளரிடம் இருப்பதாகவும் கூறிவிடமுடியாது. ஏனெனில் அரசியல் கட்சிகள், மேடைப் பேச்சாளர்கள், பத்திரிகைகள் என்பவற்றின் துணையுடனேயே வாக்காளர்களின் முடிவுபெறப்படுகிறது. அத்தோடு வாக்களிக்கமுடியாத வாக்களிப்பில் பங்குபற்றாத மக்களும் நாட்டின் மக்களே என்பதால் வாக்காளர் கையில் அரசியல் இறைமை உள்ளது எனவும் கூறமுடியாது. மொத்தத்தில் அரசியல் இறைமைக்கு இதுதான் உறைவிடமெனத் தெளிவாகக் கூறமுடியாதிருப்பினும் பொதுக்கருத்தை உருவாக்கும் வாக்காளன், அரசியல்கட்சிகள்-பத்திரிகைகள் - மேடைப் பேச்சாளர்கள் பழக்கவழக்கங்கள்-மரபுகள் போன்றவைகளின் தொகுப்பில் அமைந்திருப்பதாகக் கூறலாம்.

இவ்வாறாக சட்ட இறைமை தெளிவாக ஒழுங்கானரீதியில் நிறுவப்பட்ட துல்லியமான முடிவான ஓர் அதிகாரமாகக் காணப்படுகையில் அரசியல் இறைமை தெளிவற்ற துல்லியமற்ற ஒழுங்கான நிறுவுதலற்ற ஒன்றாகக் காட்சியளிக்கிறது.

ரூசோவின் கருத்துப்படி அரசின் இறுதி அதிகாரம் மக்களிடமே உள்ளது. இதனை பொது இறைமை Popular Sovereignty என்பர். சட்ட இறைமையிலும் சட்டங்களும் அதனுடைய செயல்களும் மக்கள் சம்மதத்தைப் பெற்று விளங்குகின்றன என்பதேபொதுஇறைமையின் கருத்து. ஜனநாயக நாடுகளில் பொது இறைமைக்கும் அரசியல் இறைமைக்கும் இடைவேறுபாடுகாண முடியாவிடினும் அரசியல் இறைமை ஒருநாட்டில் பொதுக்கருத்தை உருவாக்கும் பல்வேறு சக்திகளின் தொகுப்பால் விளங்கும் போது பொதுஇறைமையோ அரசின் இறுதி அதிகாரத்துக்கு உரியவர்கள் மக்கள் எனும் உண்மையை உணர்த்துகிறது. அத்தோடு சட்ட இறைமையின் வல்லாட்சி போக்கைத் தடுத்து நிறுத்த உரிமைபெற்றவர்கள் மக்கள் என்பதை பொது இறைமை தெட்டத்தெளிவாக காட்டுகிறது. அத்துமீறிச் செயல்படத்துணியும் சட்ட இறைமையை புரட்சியின் மூலம் அடிபணிய வைக்க மக்களுக்குச் சக்தி இருப்பதால் எந்த ஒரு அரசாங்கமும் அவதானமாக ஆட்சி நடத்த வேண்டும் என்பதை பொது இறைமை இடித்துரைக்கிறது. மக்களுடைய மக்களாலான மக்களுக்காகச் செயல்படும் அரசாங்கம் எனும் ஜனநாயக விளக்கத்தை பொது இறைமை சுட்டிக்காட்டுகிறது. இவையே இறைமையின் மூவகை தோற்றம். இவைகளை விட உண்மை இறைமை அரசனிடத்தில் இல்லாது வேறொரிடத்தில் இருக்கும் பொழுது அது பெயரளவு இறைமை எனப்படும். உதாரணம் பிரிட்டனின் மன்னன். பெயரளவில் மன்னன் இறைமையின் கருவியாக இருப்பினும் பாராளுமன்றத்திடமே உண்மை இறைமை உள்ளது.

இனி இறைமை பற்றிய கொள்கைகளை (Theories About Sovereignty) ப்பார்ப்போம். இறைமை பற்றி இருவகைக் கொள்கைகள் உண்டு ஒன்று மோனிஸ்டிக் கொள்கை என்றும் மற்றையது பன்மையாளர் கொள்கை எனவும் அழைக்கப்படுகிறது.

(தொடரும்)

# தேசிய வருமானம் ஒருகண்ணோட்டம்

-- எஸ். எஸ் தங்கராசா --

**வருமான வழியிலான கணிப்பீடு:-** வருமானவழியில் தேசிய வருமானத்தைக் கணிப்பிடும்பொழுது நம் முந்திய பகுதிகளில்குறிப்பிடப்பட்டது போன்ற வழுக்கள் ஏற்படாது கணித்தல் அவசியமாகும். இங்கு வருமானமானது பொதுத்துறையினரின் வருமானம், தனியார்துறையினரின் வருமானம் என இரண்டாகப் பாகுபடுத்தப்படும். இவ்விரு துறையினரின் உற்பத்தி முயற்சியில் ஈடுபடாதும் வருமானத்தைப் பெறமுடியும். தந்தையின் உழைப்பின் ஒருபகுதியை உற்பத்தியில் ஈடுபடாத மகன் பெறுதல், ஊழியம் (குறிப்பிட்ட கால எல்லையுள்) எதுவும் புரியாமலே ஓய்வூதியம் பெறுதல், அதிஸ்டலாபச் சீட்டு மூலமான பெறுகை போன்றன தனியார்துறைக்கும் வரி வருமானங்கள் (வருமான, தமாசா போன்றன பொதுத்துறைக்கும் கிடைக்கின்ற உற்பத்தியில் ஈடுபடாதிருக்கும்போதும் கிடைக்கின்ற வருமானங்களாகும். இந்தவகையில் பார்க்கும்போது குறிக்கப்பட்ட நாட்டின் குறிக்கப்பட்டகாலத்தில் உற்பத்தி முயற்சியில் ஈடுபட்டமைக்காக உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவற்றிற்கு கிடைத்த வருமானங்களான வாடகை, கூலி, வட்டி இலாபம் என்பவற்றின் கூட்டுத்தொகையைப் பெற்றுக்கொள்தலின் மூலம் வருமானவழியில் தேசிய வருமானத்தினைப் பெற்றுக் கொள்ளமுடியும், சுருக்கமாக வருமான வழியிலான தேசிய வருமானம் (G N I)= வாடகை + கூலி + வட்டி+ இலாபம் என்று குறிப்பிடலாம்.

G N I=F+ +I+P. இவ்வித கணிப்பீட்டினை முன்னைய பகுதிகளில் குறிப்பிட்டபடி காரணிவிலை, சந்தைவிலைகளில் கணிப்பிடலாம். இவ்விதம் கிடைத்த தேசிய வருமானமானது மொத்த உள்நாட்டு தேசியவருமானம் எனப்படும் இதனுடன் வெளிநாட்டின் தேயசி காரணிவருமானத்தினை சேர்த்தல்மூலம் மொத்த தேசிய வருமானத்தினைப்பெற்றுக்கொள்ளலாம்.

**செலவுவழி ரீதியிலான தேசிய வருமானக் கணிப்பீடு:-** இதுவரையும் உற்பத்தி வழி, வருமானவரி ஆகிய இரு வழிகளிலுமான தேசிய வருமானக் கணிப்பீட்டினை அறிந்து கொண்ட நாம் மூன்றாவது வழியான செலவுவழி தேசிய வருமானக் கணிப்பீட்டினை அடுத்து நோக்குவோம். மேலெழுந்தவாரியாக ஒருசிறு உதாரணத்தின் மூலம் அவ்வழிக்குச் செல்வோம். ஒருவனிடம் 100% வருமானம் வருவதாகக் கொள்வோம். அவன் தன் குறிப்பிட்ட வருமானத்தினை சேமிப்பு நுகர்வு ஆகிய இருதுறைகளிலோ நுகர்வில் மட்டுமோ செலவிட முடியும். ஏனெனில் உயிர்வாழ்வதற்குக் கட்டாயம் நுகர்வு செய்தே தீரவேண்டும். ஆனால் ஆய்வினை விரிவு செய்யும் நோக்கில் முழுவருமானமும் நுகர்விலும் சேமிப்பிலும் செலவிடப்படுகின்றது என்போம். சுருக்கமாக $y = c + i$ மொத்த வருமானம் = மொத்தநுகர்வு + மொத்த சேமிப்புஎனலாம், எல்லா நுகர்வுகளும் சேமிப்புகளும் தனியொருவனுக்கு எப்படிப் பொருந்திக் காணப்பட்டதோ அவ்வாறே தனியார் அரசு என்ற இரு துறைகளுக்கும் இது பொருந்துவதாகவே அமையும் மொ. நுகர்வு = அரசநுகர்வு + தனியார் நுகர்வு மொ. சேமிப்பு=அரச சேமிப்பு + தனியார் சேமிப்பு என்றாகும். அடுத்து செலவு வழியில் இடம்பெறும் சில அம்சங்களைக் கவனிக்கவேண்டும். ஏற்றுமதி இறக்குமதி என்பனவும் செலவில்மாற்றங்களை உருவாக்குவனவாகும். இந்நாட்டின் பண்டங்கள் சேவைகள் ஏற்றுமதிசெய்கையில் ஒருசெலவினமும் இறக்குமதியில் ஒரு செலவினமும் அனுபவிக்கப் படும். இங்கு ஏற்றுமதிச்செலவினத்தைக்கூட்டி இறக்குமதிச் செலவினத்தைக் கழித்தும் செலவுவழியிலான தேசிய வருமானம் பெறப்படும். இவ்விதம் பெறப்படும் வழியினைப்

(8ம் பக்கம் பார்க்க)

## உங்கள் கேள்விகளுக்கு விடை

அறிவியல் பூஞ்சோலையில் வெளிவரும் கட்டுரைகள் தொடர்பாக விளக்கக் கேள்விகள் எழுதி அனுப்பவிரும்பும் மாணவர்கள் உங்கள் கேள்வியை எழுதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூப்பனையும் இணைத்து அனுப்பினால் பதில் அளிக்கப்படும். தனிப்பட்ட முறையில் விடைகளைப் பெறவிரும்புபவர்கள் முப்பத்தைந்து சத முத்திரை ஒட்டிய சுயவிலாசமிடப்பட்ட கடித உறையையும் இணைத்து அனுப்ப மறக்க வேண்டாம்.

மேலும் இப்பகுதியில் உங்களுக்கு எப்பாடங்கள் அல்லது பாடங்களின் எப்பிரிவுகள் பிரசுரிக்கப்பட வேண்டுமெனவும் எழுதி அனுப்பினால் உங்கள் தேவைகளை பூர்த்திசெய்ய முயற்சிப்போம்.

### கேள்விக் கூப்பன்

1 பெயர்: ..............................
2 விலாசம்: ..............................
3 வகுப்பு: ..............................
4 கேள்வி: ..............................
5 கையொப்பம்: ..............................

கேள்விகளை வேறுதாளில் எழுதியும் கூப்பனோடு இணைக்கலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:
அறிவியல் பூஞ்சோலை
'ஈழநாடு' யாழ்ப்பாணம்

"அல்லைப்பிட்டி, மண்கும்பான்

# மணல் ஏற்றுவதை தடுக்க அவசர மகாநாடு

## அல்லைப்பிட்டியில் அரசஅதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

"அல்லைபபிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளிலிருந்து மண்விற்கப்பட்டு வெளியேற்றப்படுவதால் அப்பகுதிகளில் உள்ள நல்லநீர் பழுதடைந்து உப்புநீராக மாறிவருகிறது. ஆனபடியால் மண் ஏற்றுவதைக் கட்டுப்படுத்த 10 நாட்களுக்குள் மகாநாடு ஒன்று கூட்டி ஆவன செய்வேன்".

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தமக்கும் தமது பாரியாருக்கும் அல்லைப்பிட்டி மக்களாலும் நலன்புரிக் கழகத்தாராலும் அளிக்கப்பட்ட வரவேற்பை அடுத்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அல்லைப்பிட்டி மேற்கு இனிச்சபுளியடி முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் கொழும்பு மேல்நீதிமன்ற உத்தியோகத்தர் திரு எஸ். செல்வநாயகம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

மேளவாத்தியம், கரகம், காவடியுடன் அரசாங்க அதிபர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலத்தில் மேலதிக அரசாங்க அதிபர்கள் திரு. எம். பஞ்சலிங்கம், திரு. திரு. எஸ். தர்மபாலன், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ், சிவதாசன், பொதுசனத் தொடர்புகள் அதிகாரி திரு. எஸ். சண்முக சுந்தரம், வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எ. குணநாயகம், சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் செந்தில்வடிவேல் மற்றும் கச்சேரி உயர்அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரும் இடம்பெற்றனர்.

அல்லைப்பிட்டி கிழக்குச் சந்தியிலிருந்து மாலை 5 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் இரவு 7 மணிக்கு கூட்ட மைதானத்தை வந்தடைந்தது.

கூட்டத்தில் அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இவ்வரவேற்பில் கச்சேரி உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டுள்ளதால் இதனை ஒரு வரவேற்பாகமட்டும் கருதாது நடமாடும் செயலகமாகவும் கொள்ளமுடியும். நானும் செயலதிகாரிகளும் உங்களது பிரச்னைகளை நேரில் கண்டுள்ளோம். இக்குறைகளைத் தீர்க்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வோம். மணல் பிரச்னை அல்லைப்பிட்டி மண்கும்பானில் மட்டுமல்ல பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள மணற்காட்டிலும் உண்டு. இவை தீர்த்து வைக்கப்படும்.

அல்லைப்பிட்டியின் எல்லையில் இருக்கும் மண்டைதீவுக்கும், வேலணைக்குங்கூட மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இரண்டிற்கு இடையிலுள்ள அல்லைப்பிட்டிக்கு மட்டும் ஏன் மின்சாரம் இதுவரை வழங்கபடவில்லை என்பது தெரியவில்லை. கூடியவிரைவில் இப்பகுதிக்கு மின்சாரம், றேட்டு வசதி, பஸ் போக்குவரத்து வசதி ஆகியவற்றைச் செய்து தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் திணைக்களங்களுடனும் தொடர்பு கொண்டு ஆவன செய்வேன்".

தலைவர் திரு. செல்வநாயகம் பேசுகையில், சகல வசதிகளையும்கொண்ட அல்லைப்பிட்டி, வாக்காளர்தொகை குறைவினல் புறக்கணிக்கப்படுகிறது என்றும் அதைப் போக்க அரசாங்க அதிபர் ஆவன செய்ய வேண்டும். அல்லைப்பிட்டி, வேலணை வீதியைச் செப்பனிட்டு அவ்வீதிக்கு முன்னை நாள் சபாநாயகரும், அரசாங்க அதிபரின் தந்தையுமான சேர். வைத்திலிங்கம் துரைசுவாமியின் பெயரைச் சூட்டவேண்டும் என்றும் கூறினர். வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் பேசுகையில், 'தீவின் சகல பகுதிகளுக்கும் நல்ல குடிநீர் வழங்கக்கூடிய ஒரு இடம் அல்லைப்பிட்டி மட்டுமே, அப்படிப்பட்ட இடத்தில் இதுவரை எதுவித அபிவிருத்தியும் இல்லாது இருப்பது கவலைக்குரியதொன்ருகும். இங்குள்ள மணல் விற்பனை செய்யப்படுவதால் மணலை வெளியார் ஏற்றிச்சென்றுவிடுகிருர்கள். அதனுல் கடல்நீர் கிராமத்திற்குள் புகுந்து நல்லநீரை உப்புநீராக மாற்றுகிறது. யாழ். அரசாங்க அதிபர் இங்குள்ள மணலை வெளியே எடுத்துச் செல்லாது தடுக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்) என்றுர். (கொ-அ

## சென்னை வானொலியில் கருணாகரன் பாடுகிருர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் நுண்கலைப்பிரிவைச் சேர்ந்த விரிவுரையாளரும், பிரபல கர்நாடக இசைக்கலைஞருமான சங்கீதவித்துவான் ஏ. கே. கருணாகரனின் இசை நிகழ்ச்சியொன்று சென்னை வானொலி மூலம் ஒலிபரப்பாகவிருக்கின்றது.

திரு. கருணாகரனின் இசை நிகழ்ச்சியை சென்னைவானெலி எதிர்வரும் 1ம் திகதி (1-11-80) சனிக்கிழமை நண்பகல் ஒலிபரப்பும். அன்று நண்பகல் 12-02 மணிமுதல் 12 30 வரை கச்சேரியின் முதற்பகுதியையும் 12-40 - 1-00 வரை இரண்டாம் பகுதியையும் கேட்கலாம்.

நட்புறவுச் சங்கம் வந்தபின்னர்

## திருட்டு, கோஷ்டி மோதல் சம்பவங்கள் குறைவாம்

(பண்டத்தரிப்பு)

ஏழாலையில் பொலிஸ்-பொது மக்கள் நட்புறவுச்சங்கம் நிறுவப்பட்டபின்பு ஏழாலைப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள், கோஷ்டிச்சண்டைகள் என்பன மிகவும் குறைந்துள்ளதாகவும், இச்சங்கத்தின் பணிகள் மூலம் அமைதியும், சமாதானமும் இப்பகுதியில் நல்லமுறை பேணப்படுவதாகவும் சுன்னுகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. பி. சுகுணேந்திரன் பாராட்டுத் தெரிவித்தார்.

ஏழாலை பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுச்சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் அதன் தலைவா திரு. ரி. தனபாலசிங்கம் தலைமையில் ஏழாலை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோதே திரு. சுகுணேந்திரன் இப்பாராட்டுரை வழங்கினர். இச்சங்க நிர்வாகிகளின் ஒத்துழைப்பினல் குற்றச்செயல்கள் இப்பகுதியில் மிகவும்குறைந்து வருவதாவவும் ஏனைய பகுதிகளுக்கு இச்சங்கம் ஒரு எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் விளங்கி வருவதாகவும் அவர் அங்கு தெரிவித்தார். இப்பகுதியில் மேற்கொண்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இக்கூட்டததில் விபரமாக ஆராயப்பட்டது.

## யாருடையது?

அராலியைச் சேர்ந்த ந. சத்தியகுமார் என்பவரால் கந்தர்மடம் சந்திக்கண்மையில் கண்டெடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் திறப்புக்கோர்வையொன்று 'ஈழநாடு' காரியாலயததில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

## யாழ். மாநகர சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சிமன்ற மாதாந்த பொதுக்கூட்டம் இம் மாதம் 31ம் தேதி மாலை முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. (க-அ)


டியுறேல்
அப்பிள் பழச்சுவையுள்ள,
இரும்புச்சத்து நிறைந்த,
பிள்ளைகளுக்கான
விற்றமின் பாணி.






பூச்சிக் கோளாறு, உங்கள் பிள்ளைகளுக்குப் பெரும் சோகையை உண்டாக்கி கடும் பலவீனத்தை ஏற்படுத்தி சக்தியை இழக்கச் செய்கிறது.

இரும்புச் சத்தும், பி கொம்பிளெக்ஸும் கொண்ட பிள்ளைகளுக்கான டியுறேல், இரத்த விருத்தியை அதிகரிக்கச் செய்து, போஷாக்குக் குறைவு, பலவீனம் ஆகியவற்றை எதிர்க்கிறது.

பிள்ளைகளுக்கான டியுறேல் பாணி மதுசாரமற்றது. அத்துடன் உங்கள் பிள்ளைகள் பெரிதும் விரும்பும் அப்பிள் பழச் சுவையுடையது.

சில்லறை விலை 170 மிலி. - ரூ. 13/75

உங்களது பிள்ளை களைப்புற்று, சோர்வடைந்திருக்கும் போது மீண்டும் மெருகூட்டி சுறுசுறுப்பாக்க சக்திச் செறிவும், விற்றமின்களும் கொண்ட பிள்ளைகளுக்கேயுரிய டியுறேல் கொடுங்கள். அதுவே பலவீனத்தைப் பறக்கச் செய்கிறது....
அதுவே பலம் வழங்குகிறது.

ஒவ்வொரு கரண்டி பிள்ளைகளுக்கான டியுறேலிலும் இரும்புச்சத்து நிரம்பியிருக்கிறது

K & E 3254


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தியஸ்தர் பட்டியல்

(அரியாலை)

பாராளுமன்ற விளையாட்டுத்துறை அமைச்சின் வேண்டுகோளின் பேரில் அகில இலங்கை ரீதியாக உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பட்டியலொன்று தயாரிக்கப்படவிருக்கிறது.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர் திரு. வி. கே. ஆறுமுகம், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளருக்கு இது விடயமாக எழுதியுள்ள கடிதத்தில், யாழ். உதைபந்தாட்ட லீக்கிலுள்ள மத்தியஸ்தர்களின் பெயர் விபரங்களை அனுப்பி வைக்கும்படி கோரியுள்ளார். மேற்படி லீக்கின் நிர்வாகச் செயலாளர் திரு ஜி. ஜி. தேவதாசன் மத்தியஸ்தர்கள் பட்டியலை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிகிறது. (ஈ)


**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30, சனி-ஞாயிறு 2-30
சிவாஜி — பத்மினி
**மரகதம்**

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30 a. m 4-45, 7-15, & 9-45 p. m.
CARRY ON BEHIND (Color)

**சாந்தி** யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
**நீயா?**
'வெள்ளிவிழா'' வண்ணச்சித்திரம்
இன்னும் சில தினங்கள் மட்டுமே

வசூலில் பெரும் சாதனை! 5-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன் மற்றும் பலர் நடித்த
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15, 9-30
THE GAUNTLET

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் - சௌகார்ஜானகி
**நீர்க்குமிழி**

**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
டீன் குமார் ✱ பரிணலை
**அவள் ஒரு ஜீவநதி**
From 31-10-80
**Break Out**

**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்·லதா பி. எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
**மீனவ நண்பன்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
KARATE CALLEN
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி


## பிள்ளை எங்கே..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்று கூறியபடியால் நானும் அழகேசுவும் கமலத்தின் தாயாரும் பஸ்ஸில் யாழ்ப்பாணம் சென்றோம். யாழ்ப்பாணத்தில் கமலத்தின் சொந்தக்காரர் ஒருவரிடம் கமலத்தைப் பற்றி விசாரித்தோம். அவர் அங்கு கமலம் இல்லை என்று சொன்னார். பின்பு பொலிசில் புகார் செய்வதற்காகப் பருத்தித்துறைப் பொலிசிற்குப் போக எண்ணினோம். கமலத்தின் தாயார் பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்தார்.

நீத;- 2ம் எதிரியை 21-2-80 இரவு நீங்கள் எங்கபவது கண்டீர்களா?- பத்மநாதன் வீட்டில் நாங்கள் தங்கியிருந்த சமயம்பற்றிக் பெர்ணாண்டோ அங்கு வந்தார். அந்த நேரத்தில் 2ம் எதிரியும் அங்கு காணப்பட்டார். அம்போது 2ம் எதிரி பற்றிக் பெர்ணாண்டோவின் மகன் என்பது எனக்குத் தெரியாது. அப்போது 2ம் எதிரி நீண்ட நேரமாக அங்கு நின்றதைக் கண்டேன்.

1ம் எதிரி சாரபில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் 21-2-80 அன்று இரவு கமலத்தைத் தேடி யார் யார் யாழ்ப்பாணம் சென்றார்கள் என்று கேட்டபோது சாட்சி பத்மநாதன் 1ம் எதிரி முனையைச் சேர்ந்த இருவர் ஆகியோர் சென்றார்கள் என்று சொன்னார்.

2ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. ஆர். ஸ்ரீசிவாயா சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

### 2ம் எதிரியும் கவலைப்படுவதாக நான் நினைத்தேன்

சட்:- 21-2-80 அன்று இரவு நீங்கள் பத்மநாதன் வீட்டில் இருந்தபோது 2ம் எதிரி அங்கு என்ன செய்து கொண்டிருந்தார்கள்?- அவரும் எங்களைப் போல கமலத்தைக் காணவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார் என நான் நினைத்தேன். அப்போது 2ம் எதிரி நீண்ட தலைமுடியுடன் காணப்பட்டார். இப்போது அவரது தலைமுடி கட்டையாக வெட்டப்பட்டுள்ளது.

சட்;. பற்றிக் பெர்ணாண்டோவின் மகனைக் கேட்டால்த்தான் கமலத்தைப் பற்றித் தெரியமுடியும் என்று 1ம் எதிரி சொன்ன பின்பு பற்றிக்பெர்ணாண்டோவின் வீட்டிற்குப் போனவர்கள் பத்மநாதன் வீட்டிலிருந்துதான் போனார்கள்?- ஆம்.

சட்:- யார் யார் போனார்கள்?- 2ம் எதிரி, பத்மநாதன் திருமதி. பத்மநாதன், கமலத்தின் தாயார் ஆகியோர்.

சட்:- நீங்கள் பத்மநாதன் வீட்டில் நின்றீர்கள்?- ஆம் நானும், அழகேசனும் கண்மணி அம்மாவும்.

சட்:- அந்தநேரத்தில்காரும் பத்மநாதன் வீட்டின் முன் நான் நின்றது?- ஆம்.

சட்;- பற்றிக்பெர்ணாண்டோ வீட்டில் 2ம் எதிரி இல்லையென்று 1ம் எதிரி சொல்லதாக யார் சொன்னது?- கமலத்தின் தாயார்.

சட்:- 1ம் எதிரி பற்றிக் பெர்ணாண்டோவுடன் தான் வேலை செய்கின்றாரென்றும், பற்றிக்பெர்ணாண்டோவின் மகனைக் கேட்டால்த்தான் கமலத்தைப் பற்றித் தெரியும் என்றும் 1ம் எதிரி சொன்னாரென்கும் நீங்கள் பொலிசிறகுக் கூறினீர்களா?- நான்அல்வாறு கூறவில்லை.

வல்வெட்டித்துறையுல் இருந்து முதலில் பற்றிக்பெர்ணாண்டோ வீட்டிற்கு வந்தபோது காரிலிருந்து நானும், அழகேசனும் இறங்கினோம். ஆனால் பற்றிக்பெர்ணாண்டோவின் வீட்டிற்குள்க்ச் செல்லவில்லை. (ஈ)


**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 4-45pm, 7-00 pm, & 9-30 pm
**Seven Ups**
(adults only)


# யாழ். லீக் உதைபந்தாட்டம் இம்முறை குருநகரில் நடக்கும்

(அரியாலை)

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குள் இருக்கும் பொது மக்களின் விளையாட்டு மைதானமாக விளங்கிய துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு வேலைகள் காரணமாக, 1980-ம் ஆண்டுக்குரிய யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்துவதென யாழ். உதைபந்தாட்ட லீக்கின் நிர்வாக சபை தீர்மானித்துள்ளது.

இச்சுற்றுப் போட்டி நவம்பர் மாத முற்பகுதியில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. உதைபந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற 15 கழகங்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கின்றன. இக்கழகங்கள் இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 31-ந் திகதிக்கு முன்னர் நிர்வாகச் செயலாளர் திரு. ஜி. ஜி. தேவதாசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஈ)

## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

(பலாலி)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கும், ஊரெழு ரோயல் வி. கழகத்திற்குமான 1-ம் பிரிவு சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ரோயல் வி கழகம் 3 : 1 கோல்களால் வெற்றியீட்டியுள்ளது.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் உரும்பராய் சிவன் வி. கழகத்துக்குமிடையே நடைபெற்ற போட்டியில் தலா ஒரு கோல்களைப் போட்டு வெற்றிதோல்வியில்லாது முடிவுற்றது.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குமிடையிலான போட்டியில் கலாசாலை 3 : 2 கோல்களாலும், காரைநகர் வி. கழகத்துடனான போட்டியில் வித்தியாலயக் கோஷ்டி 3 : 1 கோல்களாலும் வெற்றிபெற்றுள்ளன. வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திரு. ஈ. பசுபதி, திரு. சி. எஸ். அருள்பிரகாசம் ஆகியோர் நடுவராகக் கடமையாற்றினார்கள் (ஈ)

## இருவர் தெரிவு

(அரியாலை)

அகில இலங்கை உதைபந்தாட்ட 19 வயதுக் குட்பட்டோருக்கான குழுவிற்கு யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் வகிக்கும் குருநகர் பாடும் மீன் விளையாட்டுச் சழகத்தைச் சேர்ந்த செல்வன் ஜெயந்தன் அந்தனிதாசும், பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வன் மாணிக்கத் தம்பி றுபேட்டும் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

(மண்டை தீவு)

மண்டைதீவு றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி மேற்படி வித்தியாலய அதிபர் திரு. சு. சேவராசா தலைமையில் நடைபெற்ற போது மஞ்சள் இல்லம் வெற்றிபெற்றது. மேற்படி வைபவத்தில் ஊர்காவற்றுறை எம். பி. கா. பொ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார், (ஈ)

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு/62

பொன்னையா மகிணன்,
பொற்பதி ரோட், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

வழக்காளி

எதிராக

இல. 1/20, 2-ம் ஒழுங்கை, பலாலி ரோட்,
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
1. இரத்தினம் நித்தியானந்தராசாவும் பெண்
2. விஜயலெட்சுமியும்

எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/62-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணி 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 2-ந் திகதி (1980-12-2) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 2545 சதம் 33ம் மேலும் ரூபா 2000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976-ம ஆண்டு சித்திரை மாதம் 1-ந் திகதியிலிருந்து முழுத்தொகையும் இறுக்கப்படும் வரையும் 24 வீத வட்டியுடன் கொடுத்த வழக்குச்செலவு ரூபா 496 சதம் 80 கொடுக்கவேண்டும். இதில் வட்டிப்பணத்தில் ரூபா 400/-ம் செலவில் ரூபா 350/-ம் கழித்து.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை ''மாணிக்கன்காடு'' நில. பரப்பு குழி 14,1/10. இது உத்தரவு பெற்ற நில அளவைக்காரன் ரி. கந்தையா 29-9-66ல் அளந்து விபரித்த 3008-ம் இலக்கப் படத்தில் 3-ம் துண்டு இந்த நிலப்பரப்பு சைவர் குழி பதினாலும் பத்தில் ஒன்றுக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு நல்லதம்பி செல்லையா விளைதனம், மேற்கு வயிரவர் கோவிலாதனம், தெற்கு ஒழுங்கை இதடங்கலும் (முற்பதிவு டி 336/200)

**சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.**
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்'',
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
4-10-80.

7206

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

## காங்கிரஸ் கொழும்புக்கிளைக் கூட்டம்

(கொழும்பு)
தமிழ் காங்கிரஸ் கட்சியின் கொழும்புக் கிளை அடுத்த மாதம் 2-ம் திகதி கூடுகிறது.
சட்டத்தரணி திரு. சு. சரவணமுத்து தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் 79-வது பிறந்த தின விழா ஒழுங்கு அபிவிருத்திச் சபைத்தேர்தல் அபிவிருத்திச் சபைத்தேர்தல் சபைகள் பற்றிய கருத்தரங்குகள் மற்றும் முக்கிய விடயங்கள் ஆராயப்படும்.

## சார்ஜன் கொலை வழக்கு இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)
பொலிஸ் சார்ஜண்ட் அன்ரன் கொலை வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் இன்று காலை விசாரணை செய்யப்படவிருக்கிறது. (கு)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
பொலிஸ்சார்ஜன்ட் அன்ரன் கொலை வழக்கில் எதிரிகளின் பிணைமனு விசாரணை நவம்பர் மாதம் 20ம் தேதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.
யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனும் எம். ஜாமீல் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
சட்டத்தரணி ஆர்.பி. சபாரத்தினம் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (க)

## 19வது ஆண்டு நிறைவுவிழா

(மாவிட்டபுரம்)
மல்லாகம் இந்து சமய விருத்திச் சங்க 19ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் மல்லாகம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. அ.சரவணமுத்து தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.
இதில் யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியும் பாரியாரும் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்கள்.
நாட்டியம், பேச்சு, திருமுறைப்பாடல் உட்பட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் சமய சொற்பொழிவுகளும் இடம் பெறவுள்ளது.

## சகலநும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
கள் உயர்தரக் கல்லூரி ஆகிய கல்லூரி மாணவிகளின் திருமுறை பண்ணிசைகளும். சொற்பொழிவுகளும் இடம் பெற்றன இத்திருமுறை மாநாட்டையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களை விழாவை ஆரம்பித்து வைத்த நீதவான் திரு.மகேசன் வழங்கினர்.

## தேசிய...

(5ம் பக்கத் தொடர்ச்சி)
பின்வரும் குறியீடு மூலம் காட்டலாம்.
மொ. தே. வரு (y)—மொ. நு. (c) + மொ சே. i + (ஏற்றுமதி—இறக்குமதி)
இவ்விதம் பெறப்பட்ட தேசிய வருமானம் எப்போதும் சந்தை விலைப்பெறுமதியிலேயே அமைந்து காணப்படலால் அதனைக் காரணி விலைக்கு மாற்றுவதானல் முன்னர் நோக்கியவாறு மானியத்தினைக் கூட்டி மறைமுகவரியைக் கழிக்கவேண்டும்.
—தொடரு

## ஒட்டக்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
குழந்தையின் சாதனையில் ஈடுபட்டு சுதந்திரம கப் பாடிய பிள்ளைத் தமிள் நூல்கள் பாரதியின் சுதந்திர உணர்ச்சியுடன்பாடிற் மறைக்கு கால்கோள் இட்டன எனத் துணிந்து கூறலாம்.

# காவலூர் கடற்கோட்டை நவீனமயமாகும்!

## யாழ். அரசாங்க அதிபர் நடவக்கை

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறை கடற்கோட்டை வடபகுதிக்கு உல்லாசப் பிரயாணிகள் தங்கு மடமாக மாற்றியமைக்கப்படவிருக்கிறது.
இதற்கென அறைகள் அமைத்து மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
யாழ். மாவட்ட அமைச்சு செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி எடுத்த முயற்சியின் பயனாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.
புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தினர் இதன் ஆரம்ப வேலைகளுக்காக 75 000 ரூபாவை ஒதுக்கியுள்ளனர்.
விரைவில் ஆரம்ப வேலைகள் நடைபெலவிருக்கிறது.

## வீடுஉடைத்து ரூ. 11,000 பெறுமதி நகைகள் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பழம ரோட்டில் உள்ள வீடொன்றில் பூட்டுடைத்து நேற்று முன்தினம் இரவு சுமார் 11,000 ரூபா பெறுமதியான நகைகளும், ரொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.
சுப்பையா தட்சணமூர்த்தி என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளை நடந்துள்ளது.
யாழ்.உதவிப் பொலிஸ் அதிபர் ஜனுப் நிசாம், நேற்றுக் காலை, சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டார்.
வீட்டைப் பூட்டிவிட்டு, இரவு வெளியில் நித்திரை செய்த போது இக்கொள்ளை நடந்துள்ளதாகவும் சூட்கேஸ் வெளியில் வீசப்பட்டிருந்ததாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.
நேற்று அதிகாலை 4 மணியளவில் வீட்டுக்காரர் எழுந்து பார்த்த போது கொள்ளையடிக்கப்பட்டது தெரிய வந்ததாம்.
இச்சம்பவம் பற்றி வீட்டுக்காரர் யாழ். பொலிசில் புகார் செய்துள்ளார். (க)

## கொலை வழக்கில் சாட்சிக்கு வாரண்ட்

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆஸ்பத்திரி கொலை வழக்கில், முதலாவது சாட்சி நீதிமன்றம் வராததினல் அவருக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.
இவ்வழக்கு யாழ் மேலதிக நீதவான் திரு. நாகராசா முன்னிலையில நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
இவ்வழக்கில் இவ்வருடம் மார்ச் 14ம் திகதி யாழ் ஆஸ்பத்திரி வார்ட்டில் சிறிதரன் என்பவரைக் கொலை செய்ததாகசிறிகாந்தன், கயிலைவாசன் சிவபர்லன். ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானர்.
பொலிஸ்தரப்பில் சப் - இன்ஸ்பெக்டர் ஐயாத்துரை கான்ஸ்டபிள் எஸ். குணரத்தினம் ஆகியோர் வழக்கை நடத்தினர்.
நவம்பர் மாதம் 27ம்திகதிக்கு விசாரணை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## ராஜன் பிணைமனு ஒத்திவைப்பு.

(யாழ்ப்பாணம்)
ரியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கில் 1ம் எதிரி ராஜன் பிணை மனு விசாரணை நவம்பர் 20ம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.
யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜனுப் எம். ஜாமீல் விசாரணையை நேற்று பின் போட்டார். இம்மனுவை சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் தாக்கல் செய்திருந்தார். (கு)

## சேவையைப்பெற முயற்சி

(சுழிபுரம்)
தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றிவரும் டாக்டர் எஸ். இராசநாயகத்தை மேலும் ஓர் ஆண்டு சேவை செய்யவைக்கும் முயற்சியில் பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர்.

## சந்தர்மடம் கொள்ளை: எதிரிகள் இருவரும்விடுதலை!

(யாழ்ப்பாணம்)
சுந்தர்மடம் கொள்ளை வழக்கில் எதிரிகள் இருவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.
இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். ஜாமீல் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.
இவ்வழக்கில் 77 நவம்பர் 2-ம் திகதி கந்தர்மடம் அரசடி வீதி, பொன்னம்பலம் வீட்டில் 25.000 ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்ததாக, கந்தசாமி ராசநாயகம் அல்லது பாலா, மா. நடராசா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.
எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் ஏ. சிவநாதன், கே. வசந்தசேனன் ஆகியோர் ஆஜரானர்கள். அரசதரப்பில் சட்டத்தரணி கே. ஜெயக்குமார் ஆஜரானர்.
விசாரணை முடிவில் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.
சான்றுப் பொருட்களைப் பெறவிரும்புகிறீர்களா? என எதிரிகளிடம் கேட்டபோது இல்லையென்று பதிலளித்தனர். (க-கு)

## யோகேஸ்வரன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பாணத்தில் பட்டுமல்ல மட்டக்களப்பிலும் பொய்யான தகவல்களை கூறியிருக்கிறர். அவரது பேச்சுக்கள் மூன்று தடவை வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது.
அப்போது குறுக்கிட்ட ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் "உங்கள் பேச்சையும் நாம் ஒலிபரப்புவோம்" என்றர்.
"இப்பிரச்னை தொடர்பாக முன்னர் 27ம்திகதி ஒத்திவைப்புப் பிரேரணைக்கென திகதி குறிப்பிட்டிருந்தேன். அன்று பிரதியமைச்சர் தம்மால் சமூகமளிக்க முடியவில்லையென்று கூறியிருந்தார். அதனால் இன்று எழுப்புகிறேன். ஆனல் இன்று பொறுப்பற்ற முறையில் பேசிய அமைச்சர் சமூகமளிக்கவில்லை.
"உத்தியோகபூர்வ அறிக்கையில்; யாழ்ப்பாண மாவட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட முழுத்தொகையும் செலவிடப்பட்டுள்ளது. மூன்றுவது காலாண்டுக்குப்பின் ஏற்பட்ட இந்த நிலைமை ஆச்சரியப்படக் கூடியதும் எழுத்தில் பதியக் கூடியதுமான ஒரு வெற்றி என்று குறிப்பிட்டுள்ளபோது அமைச்சர் இப்படிப்பேசியிருப்பது யாழ். மாவட்டத்திலுள்ள 11 பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவமதிப்பதாகும் எனவே இவ்வாறு பேசிய அமைச்சர் 11 எம். பி. க்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.
"அமைச்சருக்கு தவறானதகவல்களைக் கொடுத்த அதிகாரிகள் மீதும் விசாரணைநடாத்தி தண்டனை கொடுக்கவேண்டுமென்று கேட்கிறேன். நடவடிக்கைஎடுக்கப்படாத விடயத்தில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போதும் இப்பிரச்னையை எழுப்புவேன்.
"பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது சபாநாயகர். எனவே அவரிடம் கேட்கிறேன். எங்கள் மீது சேற்றை அள்ளி வீசிய அமைசசர் மீது நடவடிக்கை எடுப்பதோடு இவ்வாறு தவருகப் பேசுவதும் நிறுத்தப்படவேண்டும்.
"முதலில் இந்தப் பிரச்னை எழுந்தபோது நான் பத்திரிகைகளுக்கு அறிக்கை அனுப்பியிருந்தேன். அவை வெளிவந்த பின்னர் அதற்கு பதிலளிக்குமுகமாக அரசாங்க செயலகத்திலிருந்து கணக்குவிபரமொன்றும் கடிதமும் கையெழுத்தின்றி பத்திரிகையாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. மாவட்ட அமைச்சர் எனக்கு பக்கத்திலிருக்கும்போது இவருடைய அதிகாரிகள் பொய்யான அறிக்கைகளைத் தயாரித்து மொட்டைக் கடிதம் அனுப்புவதுபோன்று அனுப்பியிருக்கிறர்கள் இதைமாவட்ட அமைச்சர் விசாரிக்க வேண்டும்,
"இந்தக் கையெழுத்தில்லாத கடிதங்களைப் பத்திரிகையில் பிரசுரித்த பத்திரிகை நிறுவனங்கள் மீதும் பத்திரிகைக் கவுன்சிலில் முறையிடவுள்ளேன்.
"சபாநாயகர் அவர்களே. நீங்கள் இவ்வாறு தவருகப் பேசிய அமைச்சர் மன்னிப்புக் கேட்கவைப்பது உங்கள் கடமை. பொய்யான தகவல்களைக்கொடுத்த அதிகாரிகளையும் தண்டிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" இவ்வாறு திரு. யோகேஸ்வரன் கூறினர்.
இதற்குப் பதிலளித்த பிரதி திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சர் திரு வெலகெதர திரு. யோகேஸ்வரன் வாசித்த உத்தியோக பூர்வ அறிக்கையிலிருந்தே வரவு செலவு விபரத்தை வாசித்தார். (கு)

## எமது நாட்டுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
களுக்கு இந்தச் சட்டமூலம் எத்தகைய பாதிப்பினையும் ஏற்படுத்தாது. அவர்களுக்குத் தொடர்ந்தும் இச்சட்டமூலத்தின்மூலம் பாதுகாப்பளிக்கப்படும். வீடுகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போதுதல் வாடகைக் கட்டுப்பாடும் அவசியமாகிறது வீடுகள் பெருமளவில் கட்டப்பட்டால் எத்தகைய கட்டுப்பாடும் தேவையில்லை" என்றர்.
'எமதுநாட்டுக்கு பத்து லட்சம் வீடுகள்வரை தேவை. நாம் ஒருலட்சத்து 50 ஆயிரம் வீடுகள்வரை 1983-ம் ஆண்டிற்குள் நிறுவிவிடுவோம். எம்மால்மட்டும் தனியாக வீடுகளை நிறுவி முழுத்தேவையையும் பூர்த்திசெய்ய முடியாது எனவே வீடுகளைப் பெருமளவில் நிறுவ தனியாரையும் ஊக்குவிக்கவேண்டும். ஏழைக் குடியிருப்பாளர்களுக்கு நாம் 'லு சைகளைவழங்கியுள்ளோம் 25 ரூபாவுக்குக் குறைந்த வாடகைவீடுகளை நாம் குடியிருப்பாளர்களுக்குச் சொந்தமாக்கியுள்ளோம்'' என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## புதிய நெல் இனம் கண்டுபிடிப்பு

(நெல்லியடி)
கபிலநிறத்தத்திகளை எதிர்த்து வளரக்கூடிய புதிய இன நெல் வகையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பி. ஜி. 379/2 என்னும் பெயருடையதும், 120 நாளில் பயன்தரக்கூடியதுமான இப்புதிய இனத்தை குருநாகலில உள்ள வத்தல கொட நெல் ஆராய்ச்சி நிலையம்கண்டுபிடித்துள்ளது.

## யாழ். பல்கலைக்கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
லூரி கட்டிடம், தேநீர்சாலை, கலைப்பீடத்தின் 2ம் கட்ட கட்டிடம் ஆகியவற்றுடன் இப்போது முடிவுருத பல வேலைகளை முடிப்பதற்கும் இந்த நிதி வரவுசெலவுத் திட்டத்தில் உயர்கல்விஅமைச்சின் பான்யத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.
நேற்றைய 'ஈழநாடு' இதழில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு 16 லட்சத்து 50ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டதாகவெளிவந்த செய்தி தவறுகும் (ம-கு)

## பயிற்சி

ரேடியோ-டெலிவிசன், ஏயார்கொண்டிசனிங், மூன்று மாத டிப்ளோமா பயிற்சி சனி, ஞாயிறு வகுப்புக்கள், சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் 31-10-80வரை மாணவர் அனுமதிக்கப்படுவர். அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, 11, மொசாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7190

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில அக். 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. GB 8948/78 The Eelanaadu P. B. No 49
Tgrame Eelanaadu. Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org